**KRISHOBA ACADEMY BEGINNERS BATCH-2021**

**SCHEDULE-20-GK-ONELINER**

## மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் அதன் வளர்ச்சி : ஓர் அறிமுகம்

**10 TH STD NEW ECONOMICS**

- **தொடக்கூடிய பொருட்களை பொருளியல் வல்லுனர்கள் எவ்வாறு அழைக்கின்றனர்? பண்டங்கள்**
- **சேவை நடவடிக்கைகளை எவ்வாறு அழைக்கின்றனர்? பணிகள்**
- **GDP என்றால் என்ன?**

> ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற அனைத்து பண்டங்கள் மற்றும் பணிகளின் அங்காடி மதிப்பை மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) என்கிறோம்.

- **பண்டங்கள் பணிகள் அங்காடி மதிப்பு**

> **பண்டங்கள் மற்றும் பணிகள்:** பண்டங்கள் என்பது தொடக் கூடிய பொருளும், பணிகள் என்பது தொட்டு உணர முடியாதததுமான நடவடிக்கைகள் என்று இப்போது உங்களுக்கு தெரியும்.
>
> **அங்காடி மதிப்பு:** அங்காடியில் விற்கக் கூடிய பண்டங்கள் மற்றும் பணிகளின் விலை.

- **இறுதி நிலை பண்டங்கள்**

> "இறுதி நிலை பண்டங்கள் மற்றும் பணிகள்" என்பது நுகர்வுக்காக அல்லது பயன்பாட்டுக்காக உள்ள பண்டங்கள் மற்றும் பணிகள் ஆகும். இது மற்ற பண்ட பணிகளின் ஒரு பகுதியாக அமையாது. எந்த பண்டங்கள் மற்றும் பணிகள்

- **இடை நிலை பண்டங்கள்**
- **எந்த பண்டங்கள் மற்றும் பணிகள் மற்றொரு பண்ட பணிகளை உற்பத்தி செய்ய பயன்படுகிறதோ மற்றும் மற்ற பண்ட பணிகளை உற்பத்தி செய்ய பயன்படுகிறதோ அதை இடை நிலை பண்டங்கள் – டைலர் கோவன் மற்றும் அலெக்ஸ்**
- **GDP யில் இறுதி நிலை பண்டங்கள் மற்றும் சேர்க்கப்படுகிறது**
- **GDP யில் இடை நிலை பண்டத்தின் மதிப்பை சேர்த்தால் அதன் விளைவை இரு முறை கணக்கிடுதல் என அழைக்கப்படுகிறது**
- **நாட்டு வருமானம்**

> நாட்டு வருமானம் என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பாகும். பொதுவாக நாட்டு வருமானத்தை மொத்த நாட்டு உற்பத்தி (GNP) அல்லது நாட்டு வருமான ஈவு எனப்படுகிறது.

- **நாட்டு வருமானத்தை அளவிட**
  - **மொத்த நாட்டு உற்பத்தி GNP**
  - **மொத்த உள்நாட்டு உற்பத்தி GDP**
  - **நிகர நாட்டு உற்பத்தி NNP**
  - **நிகர உள்நாட்டு உற்பத்தி NDP**
  - **தலா வருமானம் PCI**
  - **GNP**

மொத்த நாட்டு உற்பத்தி என்பது அந்தநாட்டு மக்களால் ஒரு வருடத்தில் (ஈட்டிய வருமானம்) உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் (பண்டங்கள் + பணிகள்) மதிப்பைக் குறிக்கும். வெளிநாட்டு முதலீடு மூலம் ஈட்டிய இலாபமும் இதில் அடங்கும்.

GMP = C + I + G + (X – M) + NFIA

C – நுகர்வோர்
I – முதலீட்டாளர்
G – அரசு செலவுகள்
X – M– ஏற்றுமதி – இறக்குமதி
NFIA – வெளிநாட்டிலிருந்து ஈட்டப்பட்ட நிகர வருமானம்.

- GDP

ஒரு ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் உள்ள உற்பத்தி காரணிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடு (பண்டங்கள் + பணிகள்) களின் மொத்த மதிப்பே மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும்.

- NNP

நிகர நாட்டு உற்பத்தி (NNP) = மொத்த நாட்டு உற்பத்தி (GNP) – தேய்மானம்.

- NDP

நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP) = மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) – தேய்மானம்.

$$\text{தலா வருமானம்} = \frac{\text{நாட்டு வருமானம்}}{\text{மக்கள் தொகை}}$$

- தனி நபர் வருமானத்தைப் பற்றி முதன் முதலாக கூறியவர்? தாதாபாய் நௌரோஜி – இந்தியாவின் வறுமை மற்றும் ஒரு பிரிட்டிஷ்யில்லா ஆட்சி
- தனிப்பட்ட வருமானம்

  தனிப்பட்ட வருமானம் = நாட்டு வருமானத்தில் பெறு நிறுவனங்களின் வருமான வரி – பெரு நிறுவனங்களின் பகிர்ந்தளிக்கப்படாத வருவாய் – சமூக பாதுகாப்பு பங்களிப்பு + மாற்று வருவாய்.

- செலவிடத் தகுதியான வருமானம்

  DPI = தனிப்பட்ட வருமானம் – நேர்முகவரி

  (நுகர்வு முறையில் DI = நுகர்வுச் செலவு + சேமிப்பு)

- இந்தியாவின் நிதியாண்டு

  முதல் காலாண்டு Q1 என குறிக்கப்படுகிறது : ஏப்ரல், மே, ஜுன்

  இரண்டாம் காலாண்டு அல்லது Q2 : ஜுலை, ஆகஸ்ட், செப்டம்பர்

  மூன்றாவது காலாண்டு அல்லது Q3 : அக்டோபர், நவம்பர், டிசம்பர்

  நான்காவது காலாண்டு அல்லது Q4 : ஜனவரி, பிப்ரவரி, மார்ச்

- GDP வரையறை

  GDP = C + I + G + (X – M)

  C – நுகர்வோர்  I – முதலீட்டாளர்

  G – அரசு செலவுகள்  (X–M) ஏற்றுமதி – இறக்குமதி.

GDP யின் நவீன கருத்து யாரால் உருவாக்கப்பட்டது? சைமன் குஸ்நட், 1934

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் கணக்கீடு முறைகள்

- செலவினமுறை - $Y = C + I + G + (X - M)$
- வருமான முறை -

  வருமானம் = கூலி + வாரம் + வட்டி + லாபம்.

- மதிப்பு கூட்டு முறை -

| |
|---|
| டீதூள் + பால் + சர்க்கரை = தேனீர் |
| இடைநிலை பண்டங்கள் = இறுதிப் பண்டம் |

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் குறைபாடுகள்

- GDP யில் பல முக்கிய பண்டங்கள் மற்றும் பணிகள் சேர்க்கப்படவில்லை
- GDP அளவை மட்டும் அளவிடுகிறது தரத்தை அல்ல
- GDP யில் நாட்டு வருமான பகிர்ந்தளிப்பு பற்றி குறிப்பிடவில்லை
- GDP யில் மக்கள் வாழும் முறையை பற்றி குறிப்பிடவில்லை

GDP சம்பந்தப்பட்ட ஆவணங்களை எந்த அமைப்பு பாதுகாக்கிறது? மத்திய புள்ளியியல் அமைப்பு

மத்திய புள்ளியியல் அமைப்பு – தொழில்துறை உற்பத்திக் குறியீடு, நுகர்வோர் விலை குறியீடு போன்ற குறியீடுகளை வெளியிடுகிறது

இந்தியப் பொருளாதார துறைகள்

- முதன்மைத் துறை – விவசாயம்
- இரண்டாம் துறை – தொழில் துறை
- மூன்றாம் துறை – பணிகள் துறை

இந்தியாவில் ___ துறை மிகப்பெரிய துறையாகும் (பணிகள் துறை)

மொத்த மதிப்பு கூடுதல்

KRISHOBA

GVA = GDP + மானியம் – வரிகள் (நேர்முக வரி, விற்பனை வரி).

- பொருளாதார வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கு உள்ள வேறுபாடு
- மனித வள மேம்பாட்டுக் குறியீடு யாரால் அறிமுகப்படுத்தப்பட்டது? முகஹப் – உல் ஹிக், பாகிஸ்தான் (1990)
- HDI எவ்வாறு கணக்கிடப்படுகிறது? வாழ்நாள் எதிர்பார்ப்பு, வயது வந்தோரின் கல்வியறிவு, வாழ்க்கைத்தரம், GDP யின் மடக்கை செயல்பாடு கணக்கிடப்பட்டு வாங்கும் சக்தி சமநிலைக்கு சரி செய்யப்படுகிறது
- புதிய பொருளாதாரக் கொள்கை – 1990
- மொத்த தேசிய மகிழ்ச்சி (GNH) என்ற வாரத்தையை உருவாக்கியவர் யார்? 1972 ல் ஜிகமே சிங்கயே வாங்ஹக் என்ற பூட்டான் அரசர்
- பூட்டான் அரசர் GNH எதை விட முக்கியம் என்றார்? GNP
- 2011 ல் ஐநா சபை –வளர்ச்சிக்கான முழுமையான அணுகுமுறைக்கு – மகிழ்ச்சி என்ற தீர்மானம்

KRISHOBA

ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பே மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)

இந்திய பொருளாதாரத்தை மூன்று துறைகளாக வகைப்படுத்தலாம். அவை விவசாயம் அதை சார்ந்த தொழில்கள் துறை மற்றும் பணிகள் துறை.

தேய்மானம் : அதிக பயன்பாட்டின் காரணமாக பொருட்கள் தேய்மானம் அடைதல் அல்லது பழமையாதல் போன்றவைகளால் சொத்தின் பணமதிப்பு குறைதலாகும்.

வருமானம் : ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் சம்பாதித்த அல்லது சம்பாதிக்காத பணம் அல்லது பிற வருவாய்களாகும்.

மொத்த மதிப்பு கூடுதல் (GVA): ஒரு பொருளாதாரத்தில் தொழில் அல்லது சேவைத் துறையில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்பாகும்.

GNP பணவாட்டம் : விலை அளவுகள் மாறும் போது GNPல் மாற்றம் ஏற்படும்.

பொருளாதார குறியீடு : நாட்டின் பொருளாதார நிலையை குறிக்கும் புள்ளி விவர தரவுகளை பொருளாதார குறியீடு என்கிறோம்.

## உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து, அரசாங்கமும் வரிகளும்

REFER 10TH STD NEW SOCIAL SCIENCE BOOK

- **எம்.எஸ்.சுவாமிநாதன் – ஊட்டச்சத்து பாதுகாப்பு - சரிவிகித உணவு, பாதுகாப்பான குடிநீர், சுற்றுச்சூழல் சுகாதாரம், ஆரம்ப சுகாதார பராமரிப்பு மற்றும் ஆரம்பக் கல்வி ஆகியவற்றின் உடல், பொருளாதார மற்றும் சமூக அணுகல்**
- **உணவின் அடிப்படைக் கூறுகள் மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு – கிடைத்தல், அணுகல், உறிஞ்சுதல்**
- **கப்பலுக்கு வாயில் இருப்பு என்று அழைக்கப்பட்ட திட்டம் எது? அமெரிக்க தனது பொது சட்டம் 480 திட்டத்தின் மூலம் இந்தியாவுக்கு வழங்கியது**
- **உயர் ரக விதைகள் – HYV – அரிசி மற்றும் கோதுமை உணவு தானியங்கள்**
- **பொது வழங்கல் முறை – Public Distribution System**
- **தேசிய உணவு பாதுகாப்பு சட்டம் – 2013**
- **தமிழ்நாட்டில் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம்**

ISHOBA

**தமிழ் நாட்டில் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம்**

இந்தியாவில் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் துவங்கி மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர், நவம்பர் 1, 2016 அன்று இச்சட்டம் இந்தியாவிலேயே கடைசி மாநிலமாக தமிழ் நாட்டில் துவங்கப்பட்டது. அக்டோபர் 27 அன்று வெளியிடப்பட்ட அரசாங்க உத்தரவில், இச்சட்டத்தை அமல்படுத்தும்போது, அது அதன் விதிகளை மாற்றியமைக்கும் என்று அரசு குறிப்பிட்டது.

- **இந்திய உணவுக் கழகம் – Food Corporation of india**
- **வாங்கும் சக்தி சமநிலை – Purchasing Power Parity**
- **பல பரிமாண வறுமை குறியீடு - பத்து குறியீடுகள்**




**தமிழ்நாட்டில் வறுமை மாவட்டங்கள் வகைகள்**

மூன்று வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை உயர் வறுமை மாவட்டங்கள் (வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் மக்கள் தொகையில் 40% க்கும் அதிகமானோர்), மிதமான ஏழை மாவட்டங்கள் (30% முதல் 40% வரை) மற்றும் குறைந்த அளவிலான வறுமை மாவட்டங்கள் (30%க்கும் குறைவு) ஆகும்.

- தமிழ்நாட்டில்

தமிழ்நாட்டின் அதிக மற்றும் குறைவான MPI மாவட்டங்கள்

| வ. எண் | அதிக மாவட்டங்கள் | தரம் | குறைவான மாவட்டங்கள் | தரம் |
|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 1 | தர்மபுரி | 32 |
| 2 | சென்னை | 2 | பெரம்பலூர் | 31 |
| 3 | கடலூர் | 3 | இராமநாதபுரம் | 30 |
| 4 | கோயம்புத்தூர் | 4 | விருதுநகர் | 29 |
| 5 | நாகப்பட்டினம் | 5 | அரியலூர் | 28 |

- அமர்த்தியா சென் – இந்தியாவில் பசி என்ற ஒன்று மட்டுமே அரசியல் முன்னுரிமைக்கு போதுமானதாக இல்லை

KRISHOBA

## அரசாங்கமும் வரிகளும்

- வரி என்பதன் பொருள் மதிப்பீடு
- பண்டைய இந்தியாவில் வரி விதிப்பு




இந்தியாவில் வரி விதிப்பின் வேர்கள் மனு ஸ்மிருதி மற்றும் அர்த்தசாஸ்திர காலத்திலிருந்தே பின்பற்றப்பட்டது. தற்கால இந்திய வரி முறையானது பண்டைய கால வரி முறையை அடிப்படையாகக் கொண்டது.

- வரி அமைப்பு
    - ✓ சமத்துவ விதி
    - ✓ உறுதி விதி
    - ✓ சிக்கனம் மற்றும் வசதி விதி
    - ✓ உற்பத்தி திறன் மற்றும் நெகிழ்ச்சி வரி

- **இந்தியாவில் வருமான வரி**

உங்களுக்குத் தெரியுமா?

இந்தியாவில் முதன் முதலாக வருமானவரி 1860ஆம் ஆண்டு சர் ஜேம்ஸ் வில்சன் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. 1857ஆம் ஆண்டு கலகத்தின் மூலம் ஏற்பட்ட இழப்புகளை ஈடுகட்ட அரசாங்கத்தின் மூலம் போடப்பட்ட ஆணையே வரி விதிப்பாகும்.

- **வரிகளின் வகைகள்**

**வருமான வரி, நிறுவன வரி, சொத்து வரி – நேர்முக வரிகள்**

- **மறைமுக வரிகள் – பொழுதுபோக்கு வரி, முத்திரைத் தாள் வரி, சுங்கத்தீர்வை, GST**
- **வரவு செலவு திட்டம் 2019-20**



- **இந்தியாவில் 3 அடுக்கு வரிகள்**

இந்தியாவில் அரசாங்கத்தினால் மூன்று அடுக்குகள் வரி வசூலிக்கப்படுகிறது. மத்திய அரசால் எளிதில் வசூலிக்கக்கூடிய வரிகள் உள்ளன. இந்தியாவில் கிட்டத்தட்ட அனைத்து நேரடி வரிகளும் மத்திய அரசால் வசூலிக்கப்படுகின்றன. பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான வரி மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களால் வசூலிக்கப்படுகிறது. சொத்துக்களுக்கான வரி உள்ளூர் அரசாங்கங்களால் வசூலிக்கப்படுகிறது.

- **GST யை அறிமுகப்படுத்திய முதல் நாடு**

உங்களுக்குத் தெரியுமா?

1954ஆம் ஆண்டு முதன் முதலில் பண்டங்கள் மற்றும் பணிகள் வரியை அமுல்படுத்திய நாடு பிரான்ஸ் ஆகும். 1970–80 களில் பல ஐரோப்பிய நாடுகள் பண்டங்கள் மற்றும் பணிகள் வரியை அறிமுகப்படுத்தியது.

- **GST – ஒரு நாடு – ஒரு அங்காடி – ஒரு வரி**
- **GST அமைப்பு**

பண்டங்கள் மற்றும் பணிகள் வரியின் அமைப்பு (GST)

**மாநில பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (SGST): (மாநிலத்திற்குள்)**

மதிப்புக் கூட்டு வரி (VAT) / விற்பனை வரி, கொள்முதல் வரி, பொழுதுபோக்கு வரி, ஆடம்பர வரி, பரிசுச்சீட்டு வரி, மற்றும் மாநில கூடுதல் கட்டணம் மற்றும் வரிகள்.

**மத்திய பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (CGST): (மாநிலத்திற்குள்)**

மத்திய சுங்கத்தீர்வை, சேவை வரி, ஈடுசெய்வரி, கூடுதல் ஆயத்தீர்வை, கூடுதல் கட்டணம், கல்வி கட்டணம் (இடைநிலைக் கல்வி மற்றும் மேல்நிலைக் கல்வி வரி).

**ஒருங்கிணைந்த பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (IGST): (மாநிலங்களுக்கு இடையே)**

நான்கு முக்கிய GST விகிதங்கள் உள்ளன. 5%, 12%, 18% மற்றும் 28% காய்கறிகள் மற்றும் உணவு தானியங்கள் போன்ற வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசிய தேவைகளுக்கான அனைத்து பண்டங்களுக்கும் இந்த வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றன.

## வரி விதிப்பு

| | | | |
|---|---|---|---|
| வளர்வீத வரி விதிப்பு | வருமான அதிகரிப்பு | வரியும் அதிகரிக்கும் | எ.கா. வருமான வரி |
| விகித வரி விதிப்பு | வருமான அதிகரிப்பு | வரி குறையும் | எ.கா. நிறுவன வரி |
| தேய்வுவீத வரி விதிப்பு | வருமான மாற்றம் | எப்போதும் ஒரே வரி | எ.கா. விற்பனை வரி |

## இந்தியாவில் கருப்பு பணத்தை நீக்க முயற்சிகள்

இந்தியாவில் கருப்பு பணத்தைக் கட்டுப்படுத்த சமீபத்திய சட்ட முயற்சிகள்

1. மாண்புமிகு உச்சநீதி மன்றத்தின் இரண்டு முன்னாள் நீதிபதிகளின் தலைவர் மற்றும் துணை தலைவரின் கீழ் கருப்பு பணம் குறித்த சிறப்பு விசாரணைக் குழு (Special Investigation Team) அமைக்கப்பட்டது.
2. ஒரு விரிவான சட்டத்தை இயற்றுவது – கருப்பு பணம் (வெளியிடப்படாத வெளிநாட்டு வருமானம் மற்றும் சொத்துக்கள்) மற்றும் வரி விதித்தல் சட்டம், 2015.
3. பனாமாவில் சமீபத்திய காகித கசிவுகளின் வெளிப்பாடுகளை விசாரிப்பதற்காக மத்திய நேரடி வரி வாரியம் (CBDT), இந்திய ரிசர்வ் வங்கி (RBI), அமலாக்க இயக்குநரகம் (ED) மற்றும் நிதி புலனாய்வு பிரிவு (FIU) ஆகியவற்றை உள்ளடக்கிய அரசியலமைப்பு அதிகாரிகளைக் கொண்ட பல நிறுவனக் குழு (MAG) அமைக்கப்பட்டது.
4. இரட்டை வரி விதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தங்கள் (DTAAs) / வரித் தகவல் பரிமாற்ற ஒப்பந்தங்கள் (TIEAs) / பலதரப்பு மாநாடு.
5. வெளி நாட்டு கணக்கு வரி இணக்கச் சட்டம் (FATCA).
6. பண மோசடி சட்டம் 2002 மூலம் நிதிச் சட்டம் 2015.
7. பினாமி பரிவர்த்தனைகள் (தடை) திருத்தச் சட்டம் 2016 தொடக்கம்.
8. "சுத்தமான பணச்செயல்பாடு" (Operation of Money) ஜனவரி 31, 2017ல் தொடங்கியது.
9. லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டம்.
10. ரியல் எஸ்டேட் (ஒழுங்கு முறை மற்றும் மேம்பாடு) சட்டம் 2016.

## வரிக்கும் கட்டணத்திற்கும் உள்ள வேறுபாடு

| வ. எண் | வரி (Tax) | கட்டணம் (Payments) |
|---|---|---|
| 1 | வரி என்பது எந்தவித பிரதிபலனும் எதிர்பார்க்காமல் அரசாங்கத்திற்கு கட்டாயமாக செலுத்துகின்ற செலுத்துகையாகும். | கட்டணம் என்பது பணிகளை பயன்படுத்துவதற்காக செலுத்துவதாகும். |
| 2 | பொதுவாக அரசாங்கத்தின் வருமான இனங்களில் ஒன்றாக வரி மேலோங்கியுள்ளது. | கட்டணம் என்பது ஒரு குறிப்பிட்ட நன்மைகளுக்கான தனிச் சலுகைகளைப் பெற்றிருந்தாலும், பொது நல ஒழுங்கு முறையின் சிறப்பான முதன்மை நோக்கமாகும். |
| 3 | வரி என்பது கட்டாய செலுத்துகை ஆகும். | கட்டணம் (Fee) என்பது தன்னார்வக் கட்டணமாகும். |
| 4 | ஒரு தனிப்பட்ட நபரின் மீது வரி விதிக்கப்பட்டால், அதனை அவர் செலுத்த வேண்டும். இல்லையெனில் அவர் தண்டிக்கப்படுவார் | மாறாக, பணிகளை பெற விருப்பமில்லை எனில் கட்டணம் செலுத்தத் தேவையில்லை. |
| 5 | வரி செலுத்துபவர்கள் நேரடியாக எவ்வித சலுகைகளையும் எதிர்பார்க்க முடியாது.<br>உதாரணம்: வருமான வரி, அன்பளிப்பு வரி, சொத்து வரி மற்றும் மதிப்புக் கூட்டு வரி (VAT). | கட்டணம் செலுத்துவதன் மூலம் நுகர்வோர்கள், நேரடியாக சலுகைகளைப் பெறுகின்றனர்.<br>உதாரணம்: முத்திரை வரி, ஓட்டுநர் உரிமக் கட்டணம், அரசாங்க பதிவுக் கட்டணம். |

KRISHOBA

KRISHOBA ACADEMY

# BEGINNERS BATCH-2021

# SCHEDULE-21-GK-ONELINER

## IMPORTANT POINTS ONE LINER

**BEGINNERS BATCH**

## அலகு – 5

## தமிழ்நாட்டில் தொழில்துறை தொகுப்புகள்

**1. ஒரு நாட்டின் பொருளாதாரத்தை பாதுகாக்கவும் மற்றும் ஏற்றுமதி மூலம் அந்நிய செலவாணியை ஈட்டவும் உதவுவது __ எனப்படும் ? தொழில்மயமாதல்**

**2. வெளியீடுகளை இறுதி நுகர்வோர் பயன்படுத்தினால் அது ___ என்றும், வெளியீடுகள் மற்றொரு உற்பத்தியாளர்ஆல் பயன்படுத்தப்பட்டால் அது _ என்றும் அழைக்கப்படுகிறது? நுகர்வோர் பண்டங்கள், துறை மூலதன பண்டங்கள் துறை**

**3. தொழில்துறை மாவட்டம் என்ற கருத்தை பிரபலமாகியவர்? ஆல்பர்ட் மார்ஷல்**

**4. சேலத்தில் இரும்பு எஃகு ஆலை அமைக்கப்பட்ட ஆண்டு? 1973**

**5. ஆசியாவின் டெட்ராய்ட் என்று அழைக்கப்படும் நகரம்? சென்னை**

**6. மிக அதிகமான தானியங்கி தொழிலை ஒருங்கிணைக்கும் மற்றும் உதிரிபாகங்கள் செய்யும் தலைமையிடமாக திகழும் நகரம்? சென்னை**

**7. சுமைதூக்கும் வாகன முழுபாக கட்டமைப்பிற்கான தொழிற்சாலைகளுக்கு பெயர் பெற்ற இடங்கள்? நாமக்கல் மற்றும் திருச்செங்கோடு**

**8. இந்தியாவில் மிகப்பெரிய நெசவுத்தொழில் துறைகளுக்கு தாயகமாக விளங்கும் மாநிலம்? தமிழ்நாடு**

**9. தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படுவது ? கோயம்புத்தூர்**

**10. மின் தறி அலகுகள் அதிக அளவில் இருப்பதால் மின்விசை தொழில் மிகவும் பிரபலம் ஆகிய நகரங்கள் ? ஈரோடு மற்றும் சேலம்**

**11. பின்னலாடை தயாரிக்கும் நிறுவனங்களின் தொகுப்புகளுக்கு புகழ் பெற்ற இடம் ? திருப்பூர்**

**12. திருப்பூர், நாட்டின் பருத்தி பின்னலாடை ஏற்றுமதியில் கிட்டதட்ட ___ பங்கினைக் கொண்டுள்ளது? 80%**

**13. உள்நாட்டு சந்தையில் மிகப்பெரிய உற்பத்தியாளராக திகழும் இடம் ? திருப்பூர்**

**14. உலக சந்தையில் உலகின் தெற்கு அரைக்கோளத்தில் ஒரு சக்தி வாய்ந்த தொகுப்பாக திகழும் இடம்? திருப்பூர்**

**15. தெற்கு அரைக்கோளத்தில் உள்ள நாடுகள் ___ என்று அழைக்கப்படுகின்றன ? உலகலாவிய தெற்கு நாடுகள்**

**16. தோல் பொருட்கள் ஏற்றுமதியில் இந்தியாவிலேயே முதன்மை மாவட்டமாக விளங்குவது? வேலூர் மாவட்டம்**

**17. தீப்பெட்டி மற்றும் பட்டாசு உற்பத்தி சாலையில் புகழ்பெற்று விளங்கும் நகரம்? சிவகாசி**

**18. வீட்டு அலங்கார பொருட்கள் ஏற்றுமதி செய்யும் முக்கிய மையமாகத் திகழ்வது? கரூர்**

**19. உள்நாட்டு மற்றும் உலகளாவிய சந்தைகளுக்கு தரை விரிப்புகளை உற்பத்தி செய்யும் முக்கிய மையங்கள்? பவானி மற்றும் குமாரபாளையம்**

**20. நாட்டின் மின்னணு சாதன உற்பத்தியில் மையமாகத் திகழ்வது? சென்னை**

**21. மென்பொருள் உற்பத்தி சேவையில் சிறந்த மையமாகத் திகழும் நகரங்கள் ? சென்னை மற்றும் கோயம்புத்தூர்**

**22. தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்ற கழகம் (SIPCOT) நிறுவப்பட்ட ஆண்டு? 1971**

**23. தமிழ்நாடு மாநில சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் (TANSIDCO) நிறுவப்பட்ட ஆண்டு? 1970**

**24. தமிழ்நாடு தொழில் துறை மேம்பாட்டு கழகம்(TIDCO) நிறுவப்பட்ட ஆண்டு? 1965**

**25. தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம்(TIIC) வரையறுக்கப்பட்ட ஆண்டு ? 1949**

**26. நாட்டில் ஏற்றுமதிக்கு இடையூறு இல்லாத சூழலை கருத்தில் கொண்டு சிறப்பு பொருளாதார மண்டலங்களை அமைப்பதற்கான ஒரு கொள்கை எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது? ஏப்ரல் 2000**

**27. மெட்ராஸ் ஏற்றுமதி செயலாக்க மையம் நிறுவப்பட்ட ஆண்டு ? 1984**

**28. மெட்ராஸ் ஏற்றுமதி செயலாக்க மையத்தின் தலைமையகம் எங்கு உள்ளது ? சென்னை தாம்பரம் GST சாலை**

**29. அன்னிய நேரடி முதலீட்டை ஊக்குவிப்பதற்கும் அந்நிய செலவாணியை எட்டுவதற்கும் வட்டார பகுதிகளில் அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும் நிறுவப்பட்ட மையம் ? மெட்ராஸ் ஏற்றுமதி செயலாக்க மையம்**

**30. தமிழ்நாடு சிறுதொழில் கழகம் வரையறுக்கப்பட்ட ஆண்டு (TANSI) ? 1965**

**31. சிறு**

வெற்றிகரமான தொழில் தொகுப்புகளின் முக்கிய பண்புகள் பின்வருமாறு:

- சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் புவியியல் பகுதிகளுக்கு அருகாமையில் இருத்தல்.
- துறை சார்ந்த சிறப்பு கவனம்.
- நிறுவனங்களுக்கு இடையே நெருக்கமான அல்லது பரஸ்பர முறையில் இணைந்திருத்தல்.
- புத்தாக்கத்தினால் நிறுவனங்களுக்கு இடையேயான போட்டி.
- நம்பிக்கையை எளிதாக்கும் ஒரு சமூக கலாச்சார அடையாளம்
- பல்வேறு திறமையான தொழிலாளர்கள்
- சுய உதவி குழுக்கள் செயல்படுதல்
- வட்டார மற்றும் நகராட்சிகளுக்கு அரசின் ஆதரவு.

**நிறுவனங்களுக்கு நிறுவப்பட்ட முதல் தொழில் துறை நிறுவனம் -TANSI( தமிழ்நாடு சிறுதொழில் கழகம்)**

**32. ஸ்டார்ட் அப் இந்தியா திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு ? 2016 ஜனவரி 16**

**33. ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு ? 2016 ஏப்ரல் 5**

**34. புதிய சிந்தனைகளுக்கும் வணிகவியல் முறைகளுக்கும் புத்தாக்கம் புனைபவர் ___ ஆவர் ? தொழில் முனைவோர்**

**35. தொழில்முனைவோர்கள் தங்கள் தொழிலை பெருக்குவதற்கான செயல்முறைகள்______ எனப்படும் ? தொழில்முனைவு**

**குறிப்பிட்ட சில தகவல்தொழில்நுட்ப பொருளாதார மண்டலங்கள்**

வளர்ச்சியை மேலும் அதிகப்படுத்தும் பொருட்டு சென்னை வட்டார பகுதிகளைத் தவிர, இரண்டடுக்கு (Tier–II) நகரங்களான கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, ஓசூர் மற்றும் சேலம் ஆகியவை தகவல் தொழிற்நுட்ப முதலீட்டிற்கான இடங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இதனை எளிதாக்குவதற்காக ELCOT நிறுவனம் பின்வரும், எட்டு இடங்களில் ELCOSEZs (IT குறிப்பிட்ட பொருளாதார சிறப்பு மண்டலங்கள்) நிறுவியுள்ளது.

- சென்னை – சோழிங்கநல்லூர்
- கோயம்புத்தூர் – விளாங்குறிச்சி
- மதுரை – இலந்தை குளம்
- மதுரை – வடபாலஞ்சி, கிண்ணணிமங்கலம்
- திருச்சிராப்பள்ளி – நாவல்பட்டு

மாநிலத்தின் அலகுகளை அமைக்க விரும்பும் நிறுவனங்கலுக்கு ELCOSEZs மூலம் வசதிகள் வழங்கப்படுகிறது. புதிய இடங்களில் ELCOSEZs அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள், தேவை மற்றும் நம்பகத் தன்மையின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. (வரைபட தகவல் தொழில்நுட்பக் கொள்கை – 2018–19)

- திருநெல்வேலி – கங்கைகொண்டான்
- சேலம் – ஜாகீர் அம்மாபாளையம்
- ஓசூர் – விஸ்வநாதபுரம்



## சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (Special Economic Zones–SEZs)

நாட்டில் ஏற்றுமதிக்கு இடையூறு இல்லாத சூழலை கருத்தில் கொண்டு சிறப்புப் பொருளாதார மண்டலங்களை அமைப்பதற்கான ஒரு கொள்கை ஏப்ரல் 2000ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

**அதன்படி, பின்வரும் இடங்களில் ஏற்றுமதி செயலாக்க மண்டலங்களை அரசு அமைத்துள்ளது.**

| | | |
|---|---|---|
| நாங்குநேரி SEZ | – | பல் நோக்கு உற்பத்தி SEZ திருநெல்வேலி |
| எண்ணூர் SEZ | – | அனல் மின் திட்டம், வயலூர் |
| கோயம்புத்தூர் SEZ | – | தகவல் தொழிற்நுட்ப பூங்காக்கள் |
| ஒசூர் SEZ | – | தானியங்கி பொறியியல், மின்னணுவியல், விண்வெளி மற்றும் பாதுகாப்பு |
| பெரம்பலூர் SEZ | – | பல்நோக்கு உற்பத்தி SEZ |
| தானியங்கி நகரம் (Auto city) SEZ | – | தானியங்கிகள்/ தானியங்கி உதிரி பாகங்கள், திருவள்ளூர் |
| இந்தியா–சிங்கப்பூர் SEZ | – | IT/ITEs, மின்னணு வன்பொருள், தளவாடங்கள் மற்றும் கிடங்குகள் – திருவள்ளூர் மாவட்டங்கள் |
| உயிரி–மருந்துகள் SEZ | – | மருத்துவ ஆராய்ச்சி அமைப்பு, விஷக்கட்டுப்பாட்டு மையம், மைய மீள் உருவாக்க மருத்துவம், மருத்துவ ஆராய்ச்சி |

## மெட்ராஸ் ஏற்றுமதி செயலாக்க மையம் (Madras Export Processing Zone – MEPZ)

மெட்ராஸ் ஏற்றுமதி செயலாக்க மையம் சென்னையில் ஒரு சிறப்புப் பொருளாதார மையமாகும். மத்திய அரசு அமைத்த நாட்டின் ஏழு ஏற்றுமதி செயலாக்க மண்டலங்களில் இதுவும் ஒன்றாகும். இது அந்நிய நேரடி முதலீட்டினை ஊக்குவிப்பதற்கும் அந்நிய செலாவணியை ஈட்டுவதற்கும், வட்டாரப் பகுதிகளில் அதிக வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் 1984ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. MEPZ தலைமையகம் சென்னையை அடுத்த தாம்பரம் GST சாலையில் அமைந்துள்ளது.

**ஸ்டார்ட் அப் இந்தியா திட்டம் ( ஜனவரி 16, 2016)**

ஸ்டார்ட் அப் இந்தியா திட்டம் என்பது இந்திய அரசின் ஒரு முன் முயற்சித் திட்டமாகும். இதன் முதன்மையான நோக்கம் தொழில் தொடங்குவதற்கான தொடக்க முயற்சிகளை ஏற்படுத்துதல், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் வளங்களை உருவாக்குதல் ஆகும்.

**ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டம் (ஏப்ரல் 5, 2016)**

ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டம் என்பது பச்சைப் புல்வெளி(Greenfield Enterprise) நிறுவனம் அமைப்பதற்காக குறைந்தபட்சம் 10 லட்சத்துக்கும், 1 கோடிக்கும் இடையில், ஒரு பட்டியல் சாதியினர் (SC) அல்லது பட்டியல் பழங்குடியினர் (ST) மற்றும் ஒரு வங்கிக் கிளைக்கு ஒரு பெண் கடன் பெறுபவர் என கடன் வழங்கி வங்கிக்கடன்களை எளிதாக்குவதே இத்திட்டமாகும்.

# IMPORTANT POINTS ONE LINER

BEGINNERS BATCH

## 11 தமிழ்நாட்டுப் பொருளாதாரம்

## SCHEDULE-4-LESSON-2-IMPORTANT POINTS

1. வேலையின் தன்மைக்கேற்ப சரியாக ஊக்குவித்து செயல்படுத்தினால் அதே அளவிற்கு உடலுக்கு தேவையான உணவு கிடைக்கச் செய்யும் எனக்கூறியவர் ? ஜே சி குமரப்பா

2. பூகோள ரீதியாக தமிழ்நாடு எத்தனாவது பெரிய மாநிலம் ஆகும்? 11ஆவது

3. மக்கள் தொகை அடிப்படையில் தமிழ்நாடு எத்தனாவது பெரிய மாநிலம் ஆகும் ? ஆறாவது

4. தமிழ்நாடு பல்வேறு சாதனைகளுடன் எத்தனாவது பெரிய பொருளாதாரமாக உள்ளது? மூன்றாவது

5. மொத்த உள்நாட்டு உற்பத்தி பங்களிப்பில் தமிழ்நாடு எத்தனாவது இடம் ? இரண்டாவது இடம்

6. தலா வருமானம் முதலீடு நேரடி அன்னிய முதலீடு மற்றும் தொழில்துறை உற்பத்தி ஆகியவற்றில் தமிழ்நாடு எத்தனாவது இடத்தில் உள்ளது ? 3-வது இடம்

7. மனித வளர்ச்சிக் குறியீட்டில் தமிழ்நாடு எத்தனாவது இடம் வகிக்கிறது ? 3-வது இடம்

8. மூலதன முதலீட்டிலும் மொத்த தொழில்துறை உற்பத்தியில் எத்தனாவது இடம் வகிக்கிறது .? மூன்றாவது இடம்

8. தொழிற்சாலைகளின் எண்ணிக்கையில் தமிழ்நாடு எத்தனை இடம் வகிக்கிறது ? முதலிடம்

**9. மூலதன முதலீட்டிலும் மொத்த தொழில்துறை உற்பத்தியில் தமிழ்நாடு எத்தனாவது இடம் வகிக்கிறது .? மூன்றாவது இடம்**

**10. நிதி ஆயோக் அறிக்கையின் படி சுகாதார குறியீட்டில் தமிழ்நாடு எந்த இடம் வகிக்கிறது ? 3-வது இடம்**

**11. உயர் கல்வியில் மொத்த சேர்க்கை விகிதம் அதிகம் உள்ள மாநிலமாக உள்ளது ? தமிழ்நாடு**

**12. குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான முதலீட்டு திட்டங்களில் தமிழகம் எத்தனாவது இடத்தில் உள்ளது ? முதலிடம்**

**13. கல்வியறிவு குழந்தை இறப்பு விகிதம் மகப்பேறு இறப்பு விகிதம் ஆகியவற்றில் முன்னணியில் உள்ள மாநிலம் ? கேரளா**

**14. சுகாதார குறியீட்டில் தமிழ்நாடு எத்தனாவது இடத்தில் உள்ளது ? மூன்றாவது இடம்**

**15. தமிழகத்தில் பச்சிளம் குழந்தை இறப்பு விகிதம் ? 14**

**16. தமிழ்நாட்டில் உள்ள மொத்த ஆறுகள் எண்ணிக்கை ? 17**

**17. தமிழகத்தில் கிணற்றுப்பாசனம் எத்தனை சதவிகிதம் உள்ளது ? 56%**

**18. தமிழகத்தில் உள்ள சுரங்க திட்டங்களில் முன்னோடித் திட்டமாக விளங்குவது ? நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழகம் )NLC)**

**19. தமிழ்நாட்டில் மாங்கனீசு சுரங்கம் எங்கு உள்ளது ? சேலம்**

**20. பாக்ஸைட் சுரங்கம் தமிழ்நாட்டில் எங்கு உள்ளது ? ஏற்காடு**

**21. இரும்பு தாது சுரங்கம் தமிழ்நாட்டில் எங்கு உள்ளது? கஞ்சமலை**

**22. மாலிப்டினம் என்னும் ரசாயன தாது இந்தியாவிலேயே _____ என்னும் ஊரில் மட்டுமே கிடைக்கிறது ? மதுரை மாவட்டம் கரடிக் குட்டம்**

**23. இந்திய மாநிலங்களில் மக்கள் தொகை அடர்த்தியில் தமிழ்நாடு எத்தனாவது இடத்தில் உள்ளது ? 12வது இடம்**

**24. 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை அடர்த்தியில் தேசிய சராசரி ? 382**

**25. 2011ஆம் ஆண்டு தமிழ்நாட்டு மக்கள்தொகை அடர்த்தி ? 555**

**26. இந்திய அளவில் நகரமயமாதலின் சராசரி அளவு ? 31.5%**

**27. தமிழ்நாட்டின் நகரமயமாதலின் சராசரி அளவு ? 48.4%**

28. இந்திய அளவில் மொத்த மக்கள் தொகையில் தமிழகம் _____ சதவிகிதம் கொண்டுள்ளது ? 6%

29. பெண்களின் வாழ்வியல், மேம்பாடு அடைந்திருப்பதை குறிப்பது __ எனப்படும்? சமச்சீர் பாலின விகிதம்

30. தமிழ்நாட்டின் பாலின விகிதம் ? 999

31. பாலின விகிதத்தில் தமிழ்நாடு எத்தனாவது இடத்தில் உள்ளது ? 3-வது இடம்

32. நிதி ஆயோக் அறிக்கையின்படி மகப்பேறு காலத்தில் தாயின் இறப்பு விகிதத்தை கட்டுப்படுத்துவதில் இந்திய அளவில் தமிழ்நாடு எத்தனாவது இடத்தில் உள்ளது ? 3-வது இடம்

33. மகப்பேறு இறப்பு விகிதத்தில் முதலிடம் வகிக்கும் மாநிலம் ? கேரளா

34. இந்தியாவின் சராசரி ஆயுட்காலம் ? 67.9 ஆண்டுகள்

35. நம் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியானது எந்த நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சமமாகும் ? குவைத்

36. வாங்கும் சக்தி யின் அடிப்படையில் எந்த நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சமமாக உள்ளது ? ஐக்கிய அரபு எமிரேட் நாடுகள்

37. தமிழ்நாட்டில் மாநில உள்நாட்டு உற்பத்தியில் எந்த துறையை முதலிடத்தில் உள்ளது ? சேவைத்துறை

38. தமிழ்நாட்டில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் எந்தத் துறை இரண்டாம் இடத்தில் உள்ளது ? தொழில்துறை

39. தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் ? 2200 டாலர்

40. இந்தியாவின் தனிநபர் வருமானம் ?1670

41. தமிழ்நாட்டில் எத்தனை வேளாண் காலநிலை மண்டலம் உள்ளது ? 7

42. தமிழகம் உதிரிப்பூக்கள் மற்றும் பழங்கள் உற்பத்தியில் எத்தனையாவது இடம் உள்ளது ? மூன்றாவது இடம்

43. நெல் உற்பத்தியில் தமிழகம் எத்தனாவது இடம் உள்ளது ? இரண்டாமிடம்

44. தோட்டக்கலை பயிர், வாழை, தேங்காய் உற்பத்தியில் தமிழகம் எத்தனாவது இடம் ? முதலிடம்

**44. தமிழகம் எத்தனாவது இடத்தில் உள்ளது ?**

**A) தோட்டக்கலைப் பயிர் வாழை தேங்காய் உற்பத்தியில் _____? முதலிடம்**

**B) ரப்பர் உற்பத்தி _____? இரண்டாமிடம்**

**C) கரும்பு உற்பத்தி ___? நான்காம் இடம்**

**D) மிளகு உற்பத்தி_______? மூன்றாமிடம்**

**45. உணவு தானியங்கள் மற்றும் பிற தானியங்களின் உற்பத்தி திறனில் முதன்மை மாநிலமாக திகழ்வது? தமிழ்நாடு**

**46. மக்காச்சோளம் கம்பு நிலக்கடலை எண்ணெய் வித்துக்கள் பருத்தி ஆகியவற்றில் தமிழ்நாடு எத்தனாவது இடம் ? முதலிடம்**

**47. நெய் தேங்காய் ஆகியவற்றில் தமிழகம் எத்தனாவது இடத்தில் உள்ளது ? இரண்டாமிடம்**

**48. கரும்பு சூரியகாந்தி சோளம் ஆகியவற்றில் தமிழகம் எத்தனாவது இடத்தில் உள்ளது ? மூன்றாமிடம்**

**49. இந்தியாவில் மருத்துவ தலைநகரம் மற்றும் வங்கி தலை நகரம் என அழைக்கப்படுவது ? சென்னை**

**50. ஆசியாவின் டெட்ராய்ட் என அழைக்கப்படுவது ? சென்னை**

**51. பன்னாட்டு அளவில் கார் உற்பத்தி ஜாம்பவான்களின் தலை நகரம் என அழைக்கப்படுவது ? சென்னை**

**52. பேருந்து கட்டுமான தொழிலுக்கு பெயர் பெற்ற ஊர் ? கரூர்**

**53. ஆசியாவிலேயே மிகப்பெரிய சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத காகித நிறுவனங்களில் ஒன்றாக செயல்படுவது ? கரூரில் உள்ள தமிழ்நாடு காகித உற்பத்தி நிறுவனம்**

**54. எக்கு நகரம் என்று அழைக்கப்படுவது ? சேலம்**

**55. தமிழகத்தின் நுழைவாயில் என அழைக்கப்படுவது? தூத்துக்குடி**

**56. சென்னைக்கு அடுத்தபடியாக வேதிப்பொருட்கள் உற்பத்தியில் தூத்துக்குடி எத்தனாவது இடம் ? இரண்டாமிடம்**

**57. இந்தியாவின் மிகப் பெரிய ஜவுளி உற்பத்தி மையம் ? தமிழ்நாடு**

**58. இந்தியாவின் நூல் கிண்ணம் என அழைக்கப்படுவது ? தமிழ்நாடு**

**59. பின்னலாடை களின் நகரம் என அழைக்கப்படுவது ? திருப்பூர்**

**60. தென் இந்தியாவின் மொத்த மற்றும் சில்லரை ஆயத்த ஆடை களுக்கான முக்கிய ஜவுளி சந்தையாக உள்ள மாவட்டம் ? ஈரோடு மாவட்டம்**

**61. மொத்த சிமெண்டு தொழிற்சாலைகளின் எண்ணிக்கையில் தமிழ்நாடு எத்தனை இடத்தில் உள்ளது ? இரண்டாமிடம் ) முதலிடம் -ஆந்திர பிரதேஷ்(**

**62. ஜவகர்லால் நேரு அவர்களால் குட்டி ஜப்பான் என்றழைக்கப்படும் நகரம் ? சிவகாசி**

**63. இந்தியாவின் மிகப்பெரிய எஃகு உருக்காலை நிறுவனமான SAIL தமிழகத்தில் எங்கு உள்ளது? சேலம்**

**64. காற்றமுத்த விசை குழாய் நகரம் என அழைக்கப்படுவது ? கோயம்புத்தூர்**

**65. தமிழ்நாட்டின் நுழைவாயில் ? தூத்துக்குடி**

**66. ___ சட்டத்தின்படி குறு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன ? MSMED-2006**

**67. கிராம மக்களுக்கு தேவையான மின்சாரத்தை வழங்கும் ஒரு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரமாக விளங்குவது ? முப்பந்தல் காற்றாலை மையம்**

**68. சூரிய மின்சக்தி உற்பத்தியில் இந்தியாவின் சிறந்த மாநிலமாக விளங்குவது ? தமிழ்நாடு**

**69. சூரிய மின்சக்தி திட்டங்களை செயல்படுத்த உகந்த மண்டலமாக கருதப்படுவது ? தென் தமிழகம்**

**70. உயர்கல்விக்கான மொத்த சேர்க்கை விகிதத்தில் முதன்மை மாநிலமாக விளங்குவது ? தமிழ்நாடு**

**71. தமிழ்நாடு எத்தனை அடுக்கு உடல்நலக் அடிப்படை கட்டமைப்பை கொண்டுள்ளது ? மூன்று அடுக்கு**

**72. இந்தியாவில் இணையத்தின் பயன்பாட்டின் முதன்மை மாநிலம்? மகாராஷ்டிரா**

**73. தங்க நாற்கர திட்டம் முனையமாக விளங்கும் மாநிலம் ? தமிழ்நாடு**

**74. சாலைப் போக்குவரத்தில் நாட்டிலேயே தமிழ்நாடு எத்தனாவது இடத்தில் உள்ளது? இரண்டாமிடம்**

**75. இந்தியாவின் மூன்றாவது பெரிய சர்வதேச விமான நிலையம் ? சென்னை விமான நிலையம்**

**76. கண்டைனர் கையாளும் திறன் கொண்ட இந்தியாவின் இரண்டாவது முக்கிய செயற்கை துறைமுகம் ? சென்னை துறைமுகம்**

**77. உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் முதன்மை புகலிடமாக திகழ்வது ? தமிழ்நாடு**

**78. தேசிய அளவில் வேலைவாய்ப்பின்மை அளவின் சராசரி __ ஆக உள்ளது ? 50**

**79. தேசிய அளவில் தமிழ்நாடு வேலைவாய்ப்பின்மையில் எத்தனாவது இடத்தில் உள்ளது ? 22-ஆவது இடம்**

**80. தனிநபர் வருமானம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது ? மொத்த மாநில உள்நாட்டு உற்பத்திமாநில மக்கள் தொகை /**

---

KRISHOBA

KRISHOBA ACADEMY

# BEGINNERS BATCH

11TH STD ECONOMIC
VOLUME-1

# 7 இந்தியப் பொருளாதாரம்

## IMPORTANT HIGHLIGHT POINTS

1. ஒரு குறிப்பிட்ட காலத்தில் அதாவது ஒரு ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த பண மதிப்பு ____ எனப்படும் ? மொத்த உள்நாட்டு உற்பத்தி

2. ஒரு நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தின் அளவீடுகள் என்பது ___ , ______ மற்றும் ______ ஆகியவற்றைப் பொருத்தது ? மனிதவள மேம்பாட்டு, குறியீடு வாழ்க்கை தரக்குறியீடு, மொத்த நாட்டு மகிழ்ச்சி குறியீடு

3. மொத்த நாட்டு மகிழ்ச்சி என்ற தொடர் ___ ஆம் ஆண்டு_______ நாட்டின் நான்காவது மன்னரான ______ என்பவரால் உருவாக்கப்பட்டது ? 1972 , பூடான் , ஜிக்மே-சிங்யே-வாங்சுக்

4. வளர்ந்த பொருளாதார நாடுகளுக்கு 2 உதாரணம் தருக ? அமெரிக்க ஐக்கிய நாடுகள் , கனடா , இங்கிலாந்து

5. மூன்றாம் உலக நாடுகளுக்கு இரண்டு உதாரணம் தருக ? ஆப்பிரிக்கா , பங்களாதேஷ் , பாகிஸ்தான்

6. உலகின் வலிமையான மற்றும் பெரிய பொருளாதாரங்களில் வரிசையில் இந்தியா எத்தனாவது இடத்தை பிடித்திருக்கிறது ? 7-வது இடம்

7. தொழில்மயமாதல் மற்றும் பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் முன்னேறிக் கொண்டிருக்கும் நாடுகளில் எத்தனை சதவிகித பொருளாதார வளர்ச்சியுடன் ஒரு வலுவான இடத்தை இந்தியா பிடித்துள்ளது ? 7%

8. இந்தியா ஒரு ______ பொருளாதாரம் ஆகும். ? கலப்பு பொருளாதாரம்

9. இந்தியாவில் எத்தனை சதவிகிதம் மொத்த உள்நாட்டு உற்பத்தி வேளாண்மைத் துறையில் இருந்து கிடைக்கிறது ? 17%

KRISHOBA

**10.உலக பொருளாதாரத்தில், இந்தியா மொத்த உள்நாட்டு உற்பத்தியில்(GDP) __ இடத்தையும், வாங்கும் சக்தியில்(PPP)_________ இடத்தையும் பெற்றுள்ளது ?**

**7-வது இடம் மற்றும் 3-வது இடம்**

**11. இந்தியாவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பெரும்பங்கு _____ துறையின் பங்களிப்பாகும் ? பணிகள் துறை**

**12. பொருளாதார வளர்ச்சிக்கான அறிகுறிகளில் முக்கிய அறிகுறி ? நகரமயமாதல்**

**13. மக்கள் தொகை பெருக்கத்தில் இந்தியா எத்தனாவது இடத்தில் உள்ளது ? 2-வது இடம்**

**14. மக்கள் தொகை அதிகரிப்பு ஒவ்வொரு 1000 பேருக்கும்_______ என்ற வீதத்தில் அதிகரிக்கிறது ? 1.7**

**15. இந்தியாவில் ஆண்டுதோறும் ஏற்படும் மக்கள் தொகை எந்த நாட்டின் மொத்த மக்கள் தொகைக்கு சமமாக உள்ளது? ஆஸ்திரேலியா**

**16. 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவின் மொத்த மக்கள் தொகை ( கோடிகளில்) _____? 121.02 கோடி**

**17. 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி சராசரி ஆண்டு வளர்ச்சி வீதம் ? 1.66**

**18. உலகின் புவிப்பரப்பில் இந்தியா ____ பரப்பளவைக் கொண்டுள்ளது ? 2.4%**

**19. உலக வருவாயில் இந்தியா ____% வருவாயை பெற்றுள்ளது ? 1.2%**

**20. _______ ஆண்டு பெரும்பிரிவினை ஆண்டு என அழைக்கப்படுகிறது ? 1921**

**21.____________ ஆம் ஆண்டு சிறு பிளவு ஆண்டு அழைக்கப்படுகிறது ? 1951**

**22._________ ஆம் ஆண்டு மக்கள் தொகை வெடிப்பு ஆண்டு என அழைக்கப்படுகிறது ? 1961**

**23. 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி இறப்பு வீதம் ? 7.11**

**24. 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி பிறப்பு வீதம் ? 21.8**

**25. 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி மிகக் குறைந்த பிறப்பு விகிதம் மற்றும் அதிக அளவு பிறப்பு விகிதம் கொண்ட மாநிலம் ? மிகக்குறைந்த மாநிலம்- கேரளா, மிக அதிகம்- உத்திர பிரதேசம்**

**26. மிகக் குறைந்த இறப்பு விகிதம் மற்றும் அதிக அளவு இறப்பு விகிதம் கொண்ட மாநிலம் ? அதிகம்-மேற்கு வங்காளம் மற்றும் குறைவு -ஒரிசா**

**27. BIMARU என அழைக்கப்படும் மாநிலங்கள்? பீகார் ,மத்திய பிரதேசம், ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம்**

**28. ஒரு சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் வசிக்கும் மக்களின் எண்ணிக்கையை குறைப்பது ? மக்கள் தொகை அடர்த்தி**

KRISHOBA

29. 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி மக்கள்தொகை அடர்த்தி ( ஒரு சதுர கிலோ மீட்டரில் உள்ள மக்கள் ) ? 382

30. 2011 கணக்கெடுப்பின்படி மிகவும் அதிக மக்கள் தொகை அடர்த்தியுடன் உள்ள மாநிலம் ? பீகார்

31. மிகக் குறைவான மக்கள்தொகை அடர்த்தி உள்ள மாநிலம் ? அருணாச்சல பிரதேசம்

32. ஆயிரம் ஆண்களுக்கு உள்ள பெண்களின் விகிதத்தை குறிப்பிடுவது ? பாலின விகிதம்

33. 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி பாலின விகிதம் ? 940

34. மிக அதிக பாலின விகிதம் கொண்ட மாநிலம் மற்றும் அதன் பாலின விகிதம்? கேரளா,1084

35. மிக குறைந்த பாலின விகிதம் கொண்ட மாநிலம் மற்றும் அதன் பாலின விகிதம் ? ஹரியானா , 877

36. பிறப்பின் போது எதிர்பார்க்கப்படும் வாழ்நாள் அளவு _______ என அழைக்கப்படுகிறது ? வாழ்நாள் எதிர்பார்ப்பு

37. 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி கல்வி அறிவு பெற்றவர்களின் விகிதம் ? 74.04

38. 2001 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி கல்வியறிவு பெற்றவர்களில் ஆண்கள் மற்றும் பெண்களின் சதவிகிதம் ? ஆண்கள்-82.1% , பெண்கள்-65.5%

39. அதிக எழுத்தறிவு கொண்ட மாநிலம் ? கேரளா

40. குறைந்த எழுத்தறிவு கொண்ட மாநிலம் ? பீகார்

41. காடு, நீர், கனிம வளங்கள் மற்றும் ஆற்றல் சக்திகள் ஆகியன _____ வளங்களாகும் ? இயற்கை வளங்கள்

42. நீண்ட காலங்கள் நிலைத்திருக்கக்கூடிய மீண்டும் உருவாக்கக்கூடிய வளங்கள் ______ எனப்படும் ? புதுப்பிக்கக்கூடிய வளங்கள்

43. மீண்டும் உருவாக்கப்பட முடியாத நிலைத்து இருக்க முடியாதவைகள் _____ வளங்களாகும் ? புதுப்பிக்க இயலாத வளங்கள்

44. இந்தியா மொத்த நிலப்பரப்பில் ______ சதுர கிலோமீட்டர் நிலப் பரப்புடன் உலகில் ____ இடத்தை பெற்றுள்ளது ? 32.8 லட்சம் சதுர கிலோமீட்டர் , ஏழாவது இடம்

45. 2007ஆம் கணக்கீட்டின்படி இந்தியாவின் காடுகள் ___ மில்லியன் ஹெக்டேர் ஆகும் ? 69.09 மில்லியன் ஹெக்டர்

46. கர்நாடகாவிலுள்ள மேற்கு கடற்கரையில் அதிகம் காணப்படும் இரும்பு தாது ? மேக்னடைட்

KRISHOBA

47. நிலக்கரி உற்பத்தியில் இந்தியா ______ இடத்தில் உள்ளது ? மூன்றாமிடத்தில்

48. அலுமினியம் தயாரிக்க பயன்படும் முக்கியமான தாது ? பாக்சைட்

49. ஒரு வெப்பத்தை தடுக்கும் கனிமம் மற்றும் அரிதிற் மின்கடத்தி ____ ஆகும் ? மைக்கா

50. இந்தியா மொத்த வியாபாரத்தில் ___% பங்குடன், மைக்காத்தாள் உற்பத்தியில் ____ இடத்தை பெற்றுள்ளது ?

60%, முதலிடம்

51. கோலார் தங்க சுரங்கம் மற்றும் ஹட்டி தங்கவயல் சுரங்கம் ஆகியவை எந்த மாநிலத்தில் உள்ளது ? கர்நாடகா

52. ராம்கிரி தங்கவயல் சுரங்கம் எங்கு உள்ளது ? ஆந்திர மாநிலம் அனந்தபூர் மாவட்டம்

53.UNECE அறிக்கையின்படி நாடு முழுவதிலும் _____ காரட் வைரங்கள் கிடைக்கின்றன ? 4582

54. பெரிய போக்குவரத்து அமைப்பில் உலகில் எத்தனாவது இடத்தில் இந்தியா உள்ளது ? நான்காவது இடம்

55. இந்தியாவின் இருப்பு பாதையின் நீளம் _? 63,000 கிலோமீட்டர்

56. இந்தியாவின் மொத்த இருப்புப்பாதை நீளத்தில் மின்மயமாக்கப்பட்டவை ______ கிலோ மீட்டர் ஆகும் ? 13000 கிலோ மீட்டர்

57. இந்திய ரயில்வே முதல் WIFI வசதியை எங்கு தொடங்கியது ? பெங்களூர்

58. இந்திய விமான போக்குவரத்து நிறுவனம், ஏர் இந்தியா மற்றும் இந்தியன் ஏர்லைன்ஸ் ஆகியவை எப்போது ஒன்றாக இணைக்கப்பட்டது ? 27-08-2007

59. தேசிய துறைமுக வாரியம் உருவாக்கப்பட்ட ஆண்டு ? 1950

60. புதுப்பிக்க இயலாத மின்னாற்றல் மூலங்களுக்கு

எடுத்துக்காட்டு ? நிலக்கரி , பெட்ரோலியம் , இயற்கை வாயு

61. மின் உபகரணங்களில் மின் தடுப்பானாக பயன்படும் கனிமம் ? மைக்கா

62.பெக்மடைட் என அழைக்கப்படும் கனிமம் ? மைக்கா

63. புதுப்பிக்கக்கூடிய மின்சக்தி மூலவளங்களுக்கு எடுத்துக்காட்டு ? சூரிய சக்தி , காற்று சக்தி ,அலைகள் சக்தி

64. வரவு செலவுத் திட்டத்தில் ____% (GDP) கல்வித்துறைக்கு ஒதுக்கப்படுகிறது ? 3%

65. வள்ளுவர் வேளாண்மையை ______ என்று குறிப்பிடுகிறார் ? அடிப்படை பொருளாதார நடவடிக்கை

KRISHOBA

**66. ஒரு தேசத்தின் அல்லது ஒரு தனியாரின் தார்மீக ஒழுக்க நெறிகளை காயப்படுத்தினால் அந்த பொருளாதார நடவடிக்கையும் இழுக்கானது மேலும் அது பாவம் ஆனது என்று எப்பொழுது யாரால் எழுதப்பட்டது ? 1921 , காந்தி**

**67. தார்மீக மதிப்புகள் புறந்தள்ளும் பொருளாதாரம் உண்மை ஏற்றது என்று காந்தியடிகள் எப்போது கூறினார் ? 1924**

**68. ஒரு நாடு அதன் செலவுகளை கட்டுக்குள் வைத்திருக்கும் பட்சத்தில் அதன் வருமானம் குறைவாக இருந்தாலும் பாதகமில்லை என்று கூறியவர் ? திருவள்ளுவர்**

**69. நன்னெறியை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரம் ? காந்தியப் பொருளாதாரம்**

**70. காந்தியடிகள் இயந்திரங்களை ___ என்று வர்ணித்தார் ? மிகப்பெரிய பாவம்**

**71. நவீன இந்தியாவை கட்டமைத்த முதன்மை சிற்பிகளில் ஒருவர் ? ஜவகர்லால் நேரு**

**72. ஒரு நலம் பேணும் அரசியல் வறுமை எழுத்தறிவின்மை மற்றும் நோய்கள் போன்றவை இருக்காது என்று கூறியவர் ? வள்ளுவர்**

**73. உண்மையான இந்தியா வாழ்வது நகரங்களிலோ அல்லது புற நகரங்களிலோ இல்லை கிராமங்களில் தான் என்று கூறியவர் ? காந்தியடிகள்**

**74. திட்டமிடுதலை நமது நாட்டில் அறிமுகப்படுத்தியவர் ? ஜவஹர்லல் நேரு**

**75. 1915-ல் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் முதுகலை பட்டப் படிப்பிற்காக அம்பேத்கர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை ? பழங்கால இந்திய வர்த்தகம்**

**76. முனைவர் பட்டத்திற்காக அம்பேத்கர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வு கட்டுரை ? இந்தியாவின் தேசிய பங்கீடு- பற்றி வரலாறு மற்றும் பகுப்பாய்வு ஆய்வறிக்கை**

**77. திட்டமிடுதலின் சாரம் என்பது மனித சக்தி வளங்கள், பணம் இவற்றை சிறந்த வழிகளில் பயன்படுத்துவது குறிக்கும் என்று கூறியவர் ? ஜவஹர்லால் நேரு**

**78. இயந்திரங்களின் தீமைகள் குறித்து விளக்க புத்தகங்கள் எழுதப்பட வேண்டும் அதன் தீமைகள் மக்களுக்கு உணர்த்த வேண்டும் என்று கூறியவர் ? காந்தியடிகள்**

**79. பசிக் கொடுமையிலிருந்து பெரும் விடுதலையே ஒவ்வொரு மனிதனும் பெறக்கூடிய அடிப்படை சுதந்திரம் என்றும் அனைத்து குடிமகனும் இதனை அனுபவிக்க வேண்டும் என்றும் கருதியவர் ? வள்ளுவர்**

**80. இந்தியா குடிகாரர்களின் நாடாக இருப்பதைவிட ஏழைகளை நாடாக இருப்பதே மேல் என்று கூறியவர் ? காந்தியடிகள்**

**81. எந்த ஆண்டு இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் கருப்பொருள் மீதான விவாதத்தை பாராளுமன்றத்தில் ஜவஹர்லால் நேரு துவக்கி வைத்து பேசினார் ? 1956**

**82. இந்திய அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்கிய சிற்பி ? அம்பேத்கர்**

KRISHOBA

**83. 1921இல் அம்பேத்கருடைய _______ என்ற ஆய்வுக் கட்டுரை M.SC பட்டத்திற்காக ஏற்றுக்கொள்ளப்பட்டது ? பிரிட்டிஷ் இந்தியாவின் மாகாண நிதி பரவலாக்கல்**

**84. 1923ல் அம்பேத்காரின் _______ என்ற ஆய்வறிக்கையை ஏற்று லண்டன் பொருளாதாரப் பள்ளி D.SC பட்டம் வழங்கியது ? ரூபாயின் பிரச்சனைகள்**

**85. இந்திய ரிசர்வ் வங்கி தனது அம்பேத்கர் நூலான ______ என்பதில் வழங்கப்பட்ட வழிகாட்டுதலின்படி கருத்தாக்கம் பெற்றது ? ரூபாயின் பிரச்சனைகள்- அதன் தோற்றமும் அதன் தீர்வும்**

**86. அம்பேத்கர் பிரித்த மாகாண நிதி பெருக்கத்தின் மூன்று நிலைகளின் வருடத்தை குறிப்பிடுக ?**

**A) ஒப்படைப்பு வரவுசெலவுத்திட்டம் - (1871-72 முதல் 1876-77 முடிய )**

**B) ஒதுக்கீட்டு வரவுசெலவுத்திட்டம் (1877-78 முதல் 1881-82 முடிய)**

**C) வருவாய் பங்கீடு வரவுசெலவுத்திட்டம் (1882-83 முதல் 1920-21 முடிய)**

**87. 1918ல் அம்பேத்கர் எழுதிய கட்டுரையின் பெயர் ______? இந்தியாவில் குறைந்த நிலவுடைமை மற்றும் தீர்வுகள்**

**88. கிராம பொருளாதார முன்னேற்ற கொள்கைகளின் முன்னோடியாக அறியப்படுபவர் ? J.C. குமரப்பா**

**89. ஆடம் ஸ்மித்தின் "நாடுகளின் செல்வதைப் போல்" நிலவுடமை ஒருங்கிணைப்பு மற்றும் நிலவுடமை விரிவாக்கம் இவற்றிற் கிடையேயான வேறுபாட்டினை கூறுபவர் ? அம்பேத்கர்**

**90.J.C. குமரப்பா _________ என்ற பொருளாதார கருத்தை உருவாக்கினார் ? காந்தியப் பொருளாதாரம்**

**91. ஜனநாயகத்தை உறுதியாக நம்பியவர் ? ஜவகர்லால் நேரு**

**92. மனிதனின் பொருளாதார தேவைகளை நிறைவேற்ற வேண்டுமானால் சமூக பொருளாதார பிரச்சினைகள் வேலையின்மை வறுமை மற்றும் ஆதரவற்ற நிலை ஆகியவற்றைக் அறியவேண்டும் என்று கூறியவர்கள் ? காந்தியும் , குமரப்பாவும்**

**93. குமரப்பா உப்பு சத்தியாக்கிரகத்தின் போது ______ என்ற பத்திரிக்கையில் பணியாற்றிக் கொண்டிருந்தார் ? யங்இந்தியா**

**94. குமரப்பா அனைத்திந்திய கிராம தொழில் கழகத்தைத் தோற்றுவித்த ஆண்டு ? 1935**

**95. J.C குமரப்பாவை பச்சை காந்தி என்று அழைத்தவர் ? ராமச்சந்திர குஹா**

**96. கீழ்க்கண்ட கூற்றை கூறியவர் யார் ?**

KRISHOBA

**" சுதந்திரத்திற்கு முன்னும் பின்னும் இந்தியாவின் தலைசிறந்த பொருளியல் அறிஞர்களாக D.R.காட்கில், C.N வக்கில், V.K.R.V ராவ் ஆகியோரைக் குறிப்பிடலாம்"? P.R.பிரமானந்தா**

**97. முழு வேலைவாய்ப்பு பொருளாதார முன்னேற்றமும் என்ற ஆய்வுக் கட்டுரையை எழுதியவர் ? V.K.R.V ராவ்**

**98. நிலைத்த பொருளாதாரம் என்ற புத்தகத்தை எழுதியவர் ? J.C. குமரப்பா**

**99. V.K.R.V ராவ் யாருடைய மாணவர் ? J.M. கின்ஸ்**

**100. கிறிஸ்தவம் : அதன் பொருளாதாரமும் வாழ்க்கை முறையும் என்ற புத்தகத்தை யார் எப்பொழுது எழுதினர் ? J.C. குமரப்பா**

**101. தனிநபர்கள் தங்களுக்குள் வேலைகளை பரிமாறிக்கொள்ளும் வழி இருக்க வேண்டும் என்று சொன்னவர் ? அம்பேத்கார்**

**102. கூறியவர் யார் ?**

**" கீன்சன், மாணவர்களில் சிறந்தவராக கருதப்படுபவர் V.K.R.V ராவ் " ? H.W.சிங்கர்**

**103. வறுமை மற்றும் பஞ்சம் : உரிமம் மற்றும் இழப்பு இந்த கட்டுரையை எழுதியவர் மற்றும் வருடம்? அமர்த்தியா சென்,1998**

**104. ராவ் எழுதிய பேரியல் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க பங்களிப்பு வழங்கிய புத்தகம் ? "முன்னேற்றம் அடையாத நாடுகளின் முதலீடு வருமானம் மற்றும் பெருக்கி ஆகியவற்றிற்கு இடையேயான தொடர்பு "**

KRISHOBA

**105. யாருடைய கருத்துப்படி திறன் என்பது அடிப்படை கச்சாப் பொருட்களை மக்கள் நலத்திற்காக மாற்றி அமைப்பது ஆகும் ? அமர்த்தியா சென்**

**106. நிலைத்த பொருளாதாரம் மற்றும் இயேசுவின் வழிமுறைகள் என்ற புத்தகத்தை எழுதியவர் ? J.C.குமரப்பா**

**107. ராவ் உருவாக்கிய தேசிய அளவிலான 3 ஆராய்ச்சி நிறுவனங்கள் ? டெல்லி பொருளாதாரப் பள்ளி , பொருளாதார வளர்ச்சிக் கழகம், சமூக பொருளாதார மாற்றத்திற்கான கழகம்**

**108. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி எதனால் அளவிடப்படுகிறது ? GDP**

**109. வலுவான பொருளாதார நிலை கொண்ட நாடுகள் வரிசையில் இந்தியாவின் இடம் ? 7**

**110. பொதுத்துறை மற்றும் தனியார் துறைகள் சேர்ந்து செயல்படும் பொருளாதாரம் ? கலப்பு பொருளாதாரம்**

**111. எந்த ஆண்டில் இந்திய மக்கள் தொகை 100 கோடியை தாண்டியது ? 2001**

**112. ஆயிரம் மக்களுக்கு இறப்பவர் எண்ணிக்கை என்பது ? கச்சா இறப்பு வீதம்**

113. ஆயிரம் மக்களுக்கு பிறப்பவர் எண்ணிக்கை என்பது ? கச்சா பிறப்பு வீதம்

114. மக்கள்தொகை அடர்த்தி என்பது (Formula) ? மக்கள் தொகை / குறிப்பிட்ட நில அளவு

115. தேசிய வளர்ச்சிக் கழகத்தை அறிமுகப்படுத்தியவர் ? ஜவஹர்லல் நேரு

116. காந்திய பொருளாதார சிந்தனைகளை தொடர்ந்து வலியுறுத்தியவர் ? J.C. குமரப்பா

117. பொருளாதாரத்துக்கான நோபல் பரிசை அமர்த்தியா சென் பெற்ற ஆண்டு ? 1998

118. நேரடி கொள்கை வடிவமைப்பாளர் என்ற பார்வையில் J.M. கீன்சின் அடிகளை பின்பற்றுபவர் ? V.K.R.V ராவ்

119. அனைத்து மக்களுக்கும் கட்டாயமாக காப்பீடு வசதி அளிக்கப்பட வேண்டும் என்று கூறியவர் ? அம்பேத்கர்

120. குமரப்பா பொருளாதார பேராசிரியராக எங்கு பணியாற்றினார் ? அகமதாபாத்தில் உள்ள குஜராத் வித்யாபீடம்

---

KRISHOBA

# 8 இந்தியப் பொருளாதாரம் சுதந்திரத்திற்கு முன்னரும் பின்னரும்

1. வாஸ்கோடகாமா இந்தியாவிற்கு எங்கு எப்போது வந்தார் ? கோழிக்கோடு, 1498 மே 20

2. கிழக்கிந்திய கம்பெனி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு ? 1601

3.1614-இல் ________ என்பவர் ஜஹாங்கீர் இடமிருந்து தொழிற்சாலைகள் அமைக்க அனுமதி பெறுவதில் வெற்றி வெற்றி பெற்று இந்தியாவின் பல பகுதிகளை ஆக்கிரமிப்பு செய்தார் ? சர் தாமஸ் ரோ

4. எந்த ஆண்டில் ஆங்கில பாராளுமன்றம், இந்தியாவை ஆளும் அதிகாரத்தை கிழக்கிந்திய கம்பெனியிடம் இருந்து ஆங்கிலேயருக்கு மாற்றி ஒரு சட்டம் இயற்றியது ? 1858

**இதர நடவடிக்கைகள் குறுகியகால நடவடிக்கைகள் மற்றும் நீண்டகால நடவடிக்கைகள் என இரண்டாக பிரிக்கப்பட்டுள்ளன.**

**80. குறுகியகால நடவடிவக்கைகள் என்பது என்ன?**
**குறுகியகால நடவடிக்கையாக பொதுவிநியோக முறையின்கீழ் நியாயவிலை கடைகளில் அத்தியாவசிய பொருட்களை பங்கீடு செய்து வழங்குதல் ஆகும்**

KRISHOBA

**81. நீண்டகால நடடிவக்கைகள் என்பது என்ன?**
**நீண்டகால நடவடிக்கையாக பொருளாதார வளர்ச்சியை துரிதப்ப டுத்துவது, குறிப்பாக பொதுவிலைமட்டத்துடனும் வாழ்க்கைச் செலவுடனும் நேரடி தொடர்பைக் கொண்டிருக்கும் கூலிப் பொருட்களின் உற்பத்தியின் வளர்ச்சியை துரிதப்படுத்துவது ஆகும்.**

**82. விலைவாசி குறைதல், குறைந்த பண அளிப்பு மற்றும் வேலைவாய்ப்பின்மை ஆகியன __ முக்கிய இயல்புகள் ஆகும்**
**பணவாட்டத்தின்**

**83. வேலைவாய்ப்பின்மையை ஏற்படுத்தாமலும், உற்பத்தி அளவுகள் குறையாமலும் பணவீக்கத்தை திருப்பும் செயல்முறையே ___பணவீக்கம் ஆகும்**

**மீள்பணவீக்கம்**

**84. தேக்கவீக்கம் (Stagflation) என்பது என்ன?**

**தேக்கவீக்கம் என்பது பொருளாதார வளர்ச்சியில் தேக்கநிலையும், வேலைவாய்ப்பின்மையும், அதிக அளவிலான பணவீக்கமும் ஒன்றிணைந்த சூழ்நிலை ஆகும்**

**85. வணிகச் சுழற்சி (Business Cycle) என்பது என்ன?**

**ஒரு முதலாளித்துவ அமைப்பு முறையில் பொருளாதார நடவடிக்கைகள் ஏற்ற இறக்கங்களுடனேயே இருக்கும். சீரான கால இடைவெளியில் அமையும் இவ்வகை ஏற்ற இறக்கங்கள் வணிகச் சுழற்ச்சி அல்லது வியாபாரச் சுழற்சி (Trade Cycle) அல்லது தொழில் ஏற்ற இறக்கங்கள் (Industrial Fluctuations) என்றழைக்கப்படுகிறது**

**86. வணிகச் சுழற்ச்சியின் பொருள் என்ன?**

**வேலைவாய்ப்பு, உற்பத்தி, வருமானம் போன்றவற்றை உள்ளடக்கிய ஒட்டுமொத்த பொருளாதார நடவடிக்கைளில் (Aggregate economic activities) ஏற்படும் அலைவுகளே வணிகச் சுழற்ச்சி என குறிப்பிடப்படுகிறது.**

**87. வணிகச் சுழற்ச்சியின் கட்டங்கள் யாவை?**

**i) பூரிப்பு, ii) பின்னிறக்கம், iii) மந்தம், மற்றும் iv) மீட்சி**

**88. ஆர்பிஐ-ன் தலைமையகம் அமைந்துள்ள இடம்**

**அ) டில்லி**

**ஆ) சென்னை**

**இ) மும்பை**

**ஈ) பெங்களுரு**

**89. பணம் என்பது**

KRISHOBA

அ) உள்ளடக்க மதிப்பு இருந்தால் ஏற்றுக்கொள்ளளப்படுவது

ஆ) நிலையான வாங்கும் சக்தியை கொண்டது

இ) உள்ளவற்றில் அதிகநீர்மைத்தன்மை கொண்ட சொத்து ஆகும்.

ஈ) வளங்களை பங்கிட்டுக்கொள்ள தேவைப்படுகிறது.

90. காகிதப்பண முறையை மேலாண்மை செய்வது

அ) மைய பணவியல் அமைப்பு

ஆ) மாநில அரசு

இ) மைய அரசு

ஈ) வங்கிகள்

91. M1 மற்றும் M2 ஆகிய இரண்டிற்கும் உள்ள வித்தியாசம்

அ) அஞ்சலக அனைத்து வைப்புகள்

ஆ) அஞ்சலக சேமிப்பு வங்கியின் சேமிப்பு வைப்புகள்

இ) வங்கியின் கால வைப்புகள்

ஈ) காகிதப்பணம்

KRISHOBA

92. இர்விங் ஃபிஷரின் பண அளவுக் கோட்பாடு பிரபலமான ஆண்டு

அ) 1908

ஆ) 1910

இ) 1911

ஈ) 1914

93. MV என்பது

அ) பணத் தேவை

ஆ) சட்டபூர்வ பண அளிப்பு

இ) வங்கிப் பண அளிப்பு

ஈ) மொத்த பண அளிப்பு

94. பணவீக்கம் என்பது

அ) விலைகள் அதிகரிப்பு

ஆ) விலைகள் குறைதல்

இ) பணமதிப்பு அதிகரிப்பு

ஈ) விலைகள் மாறாதிருத்தல்

95. ____ பணவீக்கம் பணமதிப்பில் தீவிர மதிப்பு குறைவினை ஏற்படுத்துகிறது.

அ) தவழும்

ஆ) நடக்கும்

இ) ஓடும்

ஈ) உயர்

96. கூலி மற்றும் மூலப் பொருட்கள் செலவு கூடுவதால் பொருட்களின் பொது விலைமட்டம் அதிகரிப்பது ____ பணவீக்கம் ஆகும்

அ) செலவு உந்து

ஆ) தேவை இழுப்பு

இ) ஓடும்

ஈ) தாவும்

97. பணவீக்கத்தின்பொழுது பயனடைபவர்கள் யார்?

அ) கடன் பெற்றோர்கள்

ஆ) கடன் வழங்கியோர்

இ) கூலி மற்றும் சம்பளம் பெறுவோர்

ஈ) அரசு

98. _____ என்பது பணவீக்க விகிதம் குறைந்து செல்வது ஆகும்.

அ) எதிர் பணவீக்கம்

ஆ) பணவாட்டம்

KRISHOBA

இ) தேக்கவீக்கம்

ஈ) மந்தம்

99. தேக்கவீக்கத்தில் பணவீக்க விகிதத்துடன் இணைந்திருப்பது

அ) தேக்கம்

ஆ) வேலைவாய்ப்பு

இ) உற்பத்தி

ஈ) விலை

100.பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை ______ அழைக்கின்றோம்.

அ) பூரிப்பு

ஆ) பின்னிறக்கம்

இ) மீட்சி

ஈ) வணிகச்சுழற்ச்சி

KRISHOBA

101.மந்த காலத்தில் பொருளியல் நடவடிக்கைகள் இவ்வாறு இருக்கும்

அ) உயர்ந்தபட்சமாக

ஆ) மிக மோசமாக

இ) மிக குறைந்தபட்சமாக

ஈ) மிக நல்லநிலையில்

102.“பரிவர்த்தனைகளில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு இடையீட்டுக்கருவியாகவும், அளவீடு மற்றும் மதிப்பினை இருப்பு வைத்தல் ஆகியவற்றினை செய்யும் ஒரு பொருள் பணம்” என்ற இலக்கணத்தை வழங்கியவர்

அ) கிரௌதர்

ஆ) பிகு

இ) வாக்கர்

ஈ)பிரான்சிஸ்டி பேக்கான்

103.பற்று அட்டை என்பது _____ உதாரணம் ஆகும்.

அ) கட்டளைப்பண

ஆ) காகிதப்பண

இ) நெகழி பண

ஈ) கடன் பண

104.ஃபிஷரின் பண அளவுக் கோட்பாடு பணத்தின் இந்த பணியின் அடிப்படையில் அமைக்கப்பட்டது

அ) மதிப்பளவு

ஆ) மதிப்பின் நிலைக்கலன்

இ) பரிவர்த்தனை கருவி

ஈ) வருங்கால செலுத்துதல்களுக்கான அடிப்படை

105.MV = PT என்ற சமன்பாட்டில், V என்பது

அ) வாணிபத்தின் அளவு

ஆ) பணத்தின் சுழற்ச்சி வேகம்

இ) ரொக்கப் பணத்தின் அளவு

ஈ) வங்கி மற்றும் கடன் பணஅளவு

106.விலைவாசி மெதுவாக உயரும் பொழுது அது அழைக்கப்படுவது

அ) தாவும் பணவீக்கம்

ஆ) மிதமான பணவீக்கம்

இ) உயர் பணவீக்கம்

ஈ) பணவாட்டம்

107._______ பணவீக்கம் பொருளாதாரத்தினை எந்த வகையிலும்பாதிக்காது.

அ) நடக்கும்

KRISHOBA

ஆ) ஓடும்

இ) தவழும்

ஈ) தாவும்

KRISHOBA

# KRISHOBA ACADEMY

## வங்கியியல்

## FULL MINI TEST -75 QUESTION ANSWER

1.“வணிக வங்கிகள் வாணிபத்திற்கான குறுகியகால கடனை அளித்தல், மற்றும் கடன் உருவாக்கம் செய்யும் நிறுவனங்கள் ஆகும்” ? என்று கூறியவர் ? கல்பர்ட்சன் (Culbertson)

2. 1656-ல் நிறுவப்பட்ட ஒரு தனியார் வங்கியிலிருந்து தோன்றிய உலகின் முதல் மைய வங்கி ? ஸ்வீடன் நாட்டு ரிக்ஸ் வங்கி

3.______ஆம் ஆண்டு பணத்தை வெளியிடுவதற்கான முழு உரிமையை ஸ்வீடன் நாட்டு ரிக்ஸ் வங்கி பெற்றது ? 1897

4.வங்கிக் கலையின் அடிப்படையில் 1864ல் தோற்றுவிக்கப்பட்டு பணத்தை வெளியிட்ட முதல் மைய வங்கி ? இங்கிலாந்து வங்கி (Bank of England)

5.___________ஆம் ஆண்டு பிரஸ்ஸல்ஸ் நகரில் கூட்டப்பட்ட பன்னாட்டு நிதிய மாநாட்டில் (International Finance Conference) எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் 1921 மற்றும் 1954 ஆம் ஆண்டு வரையிலான காலக்கட்டத்தில் பெரும்பாலான நாடுகளில் மைய வங்கி அமைப்புகள் தோற்றுவிக்கப்பட்டன ? 1920-ஆம் ஆண்டு

6.வங்கி வாடிக்கையாளர்களுக்கு முகவராக (Agent) இருந்து செய்யும் பணிகளை ________ எனப்படுகிறது ? முகமைப்பணிகள்

7.வங்கிகள் தன் வாடிக்கையாளர்- களுக்காக சில கூடுதல் பயன்பாடுகளை உருவாக்கும் நோக்கில் செய்யும் பணிகளைப் __________ பணிகள் என்கிறோம் ? பொதுப் பயன்பாட்டு பணிகள்

8.மொத்த பண அளிப்பில் கடன் பணத்தின் அளவினை அதிகரிப்பது ________ ஆகும் ? கடன் உருவாக்கம்

9.________ என்பது வாடிக்கையாளர்களின் வைப்புகளிலிருந்து, தேவைப்படுவோருக்கு அவர்களின் விண்ணப்பம் மற்றும் ஒப்பந்தத்தின் போல் கடன் மற்றும் முன்பணம் கொடுப்பது ஆகும் ? வங்கிக் கடன்

10. நவீன வங்கிகளால் உருவாக்கப்படும் வைப்புக்கள் இருவகைப்படும். அவைகள் ? முதல்நிலை அல்லது செயலற்ற வைப்புகள் (Primary or Passive Deposits)> மற்றும் பெறப்படும் அல்லது செயல்படும் வைப்புகள் (Derived or Active Deposits)

11. ஒரு வாடிக்கையாளர் தனது ரொக்கப் பணத்தினை வங்கியில் செலுத்துகிறார் எனில் அவரது பெயரில் பற்று வைக்கப்படும். இது _________என அழைக்கப்படுகிறது ? முதல்நிலை வைப்பு அல்லது செயல்படா வைப்பு

12.ஒருவருக்கு வழங்கப்படும் கடன், ரொக்கமாக கையில் கொடுக்கப்படாமல் அவர் கணக்கில் செலுத்தப்படும். இவ்வாறு செலுத்தப்படும் தொகை ___________எனப்படுகிறது ? பெறப்பட்ட வைப்பு அல்லது செயல்படும் வைப்பு

13.இந்திய ரிசர்வ் வங்கி 2018 – 19 ஆண்டில் தனது உபரி நிதியிலிருந்து மத்திய அரசுக்கு _______ கோடி வழங்கியுள்ளது ? 68,000 கோடி

14.இந்திய ரிசர்வ்வங்கி 1934ம் ஆண்டு சட்ட விதிப்படி எப்போது அமைக்கப்பட்டது ? 1935ம் ஆண்டு ஏப்ரல் 1ம் தேதி

15. இந்திய ரிசர்வ்வங்கி __________ ம் ஆண்டு தேசிய மயமாக்கப்பட்டு மத்திய அரசுக்குச் சொந்தமானது ? ஜனவரி 1ம் தேதி 1949

16. RBI இன் முதல் ஆளுநர் ? ஓஸ்போர்ன் ஸ்மித் (Osborne smith)

17.அந்நியச் செலாவணியின் பாதுகாவலன் ? இந்திய ரிசர்வ்வங்கி

18._________ம் நூற்றாண்டில் காகிதப் பணம் வெளியிடும் முறை துவங்கியது ?18ம் நூற்றாண்டில்

19.தனியார் வங்கிகளான __________ , _________ , _________ வங்கிகள் முதலில் காகிதப் பணத்தை அச்சடித்தது ? வங்காள வங்கி, மும்பை வங்கி மற்றும் சென்னை வங்கிகள்

20________என்பவரால் 1 க்கு 40 செம்பு நாணயங்கள் என்ற விகிதத்தில் முதல் ரூபாய் வெளியிடப்பட்டுள்ளது ? .ஷெர் ஷா சூரி (Sher shah suri)

21. சமஸ்கிருதச் சொல்லான ________விலிருந்து ரூபாய் என்ற வார்த்தை தோன்றியது ? ரௌப்பியா (Raupya)

22__________வங்கி அனைத்து வங்கிகளுக்கும் தலைமை வங்கியாகும்? இந்திய ரிசர்வ்வங்கி

23. ________ ஆம் ஆண்டு அந்நிய செலாவணி மேலாண்மைச் சட்டம் (Foreign Exchange Management Act – FEMA) சட்டத்தின்படி இது அந்நிய செலாவணி மேலாண்மையும நிர்வகிப்பினையும் மேற்கொள்கிறது ? 1999- ஆம் ஆண்டு

24.________ ஆம் ஆண்டு செலுத்துதல் மற்றும் தீர்வுச் சட்டம் (The Payment and Settlement System Act. 2007 – PSS Act) இந்திய ரிசர்வ் வங்கிக்கு நாட்டின் செலுத்துதல் மற்றும் தீர்வு செய்வதற்கான மேற்பார்வையிடும் அதிகாரத்தை வழங்கியுள்ளது ? 2007

25.சர்வதேச பண நிதியத்தின் (International Monetary Fund) இந்திய உறுப்பினர் பிரதிநிதியாக _________விளங்குகிறது ? இந்திய ரிசர்வ் வங்கி

26.இந்திய ரிசர்வ் வங்கி எந்த ஆண்டு வங்கி குறைதீர்ப்பாயத்தினை (Banking Ombudsman) அறிமுகப்படுத்தியது ? 1995

27. வங்கிகளின் திறனை அளவிடும் விதமாக உலகளவில் ஏற்கப்பட்டுள்ள நெறிமுறைகள் மற்றும் மதிப்பீடுகள் (அடிப்படையில்) இந்திய ரிசர்வ் வங்கி, __________ அமைத்துள்ளது ? இந்திய வங்கி நெறிமுறை மற்றும் மதிப்பீடுகள் வாரியத்ததை (Banking Codes and Standards Board of India - BCSBI)

28._______ என்பது மைய வங்கியின் பணவியல் மேலாண்மையின் முக்கிய நோக்கம் ஆகும் ? கடன் கட்டுப்பாட்டு நுட்பம்

29.கடன் கட்டுப்பாட்டு முறைகள், _________ மற்றும் _______ஆகியவற்றின் அடிப்படையில் சட்டபூர்வ அங்கீகாரத்தினை பெறுகிறது ? 1934ஆம் ஆண்டின் இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் மற்றும் 1949-ஆம் ஆண்டின் வங்கி நெறிமுறைச் சட்டம்

30. வங்கி விகிதக் கொள்கை என்பது _________ என்றும் அழைக்கப்படுகிறது ? தள்ளுபடி விகித கொள்கை (Discount Rate Policy)

31.முதல்நிலை மாற்றுச் சீட்டுகள் மற்றும் பிணையங்கள் தள்ளுபடி செய்கிறது என்பதே _______என்பதாகும் ? வங்கி விகித கொள்கை

32.__________ என்பது தெரிந்தெடுத்த துறைகளில், தொழில்கள், வணிகங்கள் அல்லது பயன்களில் மட்டும் கடன் கட்டுப்பாட்டினை

கொண்டு வருவது ஆகும் ? கடன் தன்மை கட்டுப்பாட்டுமுறை அல்லது தெரிந்தெடுத்த கடன் கட்டுப்பாட்டு முறைகள் (Selective Credit Control Methods)

33. மாறும் ரொக்க இருப்பு விகிதம் முதன்முதலாக அமல்படுத்தியது மற்றும் அதை பரிந்துரைத்தது யார் ? பரிந்துரைத்தது கீன்ஸ் மற்றும் அமல்படுத்தியது பெடரல் ரிசர்வ் சிஸ்டம்

34.கடன் பங்கீடு (Rationing of Credit). முதன்முறையாக பதினெட்டாம் நூற்றாண்டில் __________ வங்கியில் இம்முறை பயன்படுத்தப்பட்டது ? இங்கிலாந்தின் மையவங்கியான இங்கிலாந்து வங்கியில் (Bank of England)

35. ______ என்பது ஒவ்வொரு வணிக வங்கியும் எவ்வளவு அதிகபட்ச கடன் மற்றும் முன்பணம் கொடுக்கலாம் என்பதனை மைய வங்கி வரையறுப்பது ஆகும் ? மாறும் தொகுப்பு வரையறை

36. ______ என்பது தங்களது சொத்து மதிப்பில் எந்த அளவு மூலதனமாக வைத்துக்கொள்ளலாம் என்பதனை மைய வங்கி வரையறை செய்வது ஆகும் ? மாறும் மூலதன சொத்து விகிதம் வணிக வங்கிகள்

37.______ என்பது வணிக வங்கிகளின் கடன் அளவை கட்டுப்படுத்த மைய வங்கி அடிக்கடி கையாளும் ஒரு முறையாகும் ? நெறிமுறைத் தூண்டல் (Moral Suasion)

38. ஈட்டுக் கடன்கள் மீதான விளிம்பு தொகை தேவையை மாற்றுதல் (Changes in the Margin Requirement on Security Loans) எந்த நாட்டில் பெருமளவு பயன்படுத்தப்படுகிறது ? அமெரிக்கா

39. __________ஈட்டுக் கடன்களின் விளிம்புநிலை தொகை தேவையை மாற்றியமைக்கும் அதிகாரத்தை கொண்டுள்ளது ? அமெரிக்க பெடரல் ரிசர்வ் சிஸ்டத்தின் இயக்குநர் குழு

40.அமெரிக்காவின் பிணைய பரிவர்த்தனை சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு (Securities Exchange Act) ? 1934-ஆம் ஆண்டு

41. பணத்தின் அளிப்பைக் கட்டுப்படுத்த இந்திய ரிசர்வ் வங்கியால் மேற்கொள்ளப்படும் கருவிகளே _________மற்றும்_______ ஆகும் ? ரெபோ விகிதம் மற்றும் மீள்ரெப்போ விகிதம்

42.ரெப்போ விகிதம் எப்பொழுதும் மீள்ரெப்போ விகிதத்தை விட _________ ஆக இருக்கும் ? அதிகமாகவே

43. வணிக வங்கிகளுக்கு மைய வங்கி குறுகிய கால கடன் வழங்கும்பொழுது விதிக்கும் வட்டி விகிதமே _________ எனப்படுகிறது ? ரெப்போ விகிதம்

**44.வணிக வங்கிகளிடமிருந்து வாங்கும் கடனுக்கான இந்திய ரிசர்வ் வங்கி கொடுக்க விரும்பும் வட்டி விகிதமே _________ எனப்படுகிறது ? மீள் ரெப்போ விகிதம்**

**45.இந்திய ரிசர்வ் வங்கி தனக்குக்கீழாக ___________, ___________ , ________ மூன்றடுக்கு முறை வழியாக விவசாயத்திற்கான கடனை வழங்கி வந்தது ? மாநில கூட்டுறவு வங்கிகள் (மாநில அளவு), மத்திய கூட்டுறவு வங்கிகள் (மாவட்ட அளவு), மற்றும் துவக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள் (கிராம அளவு)**

**46.1982 - ஆம் ஆண்டிற்கு பிறகு விவசாய கடன் சம்பந்தமான அனைத்து பொறுப்புகளையும் ________ வங்கி இந்திய ரிசர்வ் வங்கியிலிருந்து பெற்றுக்கொண்டது ? நபார்டு வங்கி (NABARD)**

**47._________ஆம் ஆண்டு விவசாய மறுகடன் மேம்பாட்டு கழகம் ஆரம்பிக்கப்பட்டது ? ஜூலை 1, 1963-ல்**

**48. ஊரக நிதி வழங்கும் நிறுவனங்களில் அடுத்த முக்கியமான வங்கியமைப்பு வட்டார ஊரக வங்கிகள் ஆகும். இது_______ என்றும் அழைக்கப்படுகிறது ? கிராமின் வங்கிகள் (Gramin Banks)**

**49.வட்டார ஊரக வங்கிகள் ________ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன ? 1975**

**50. _________ ஆம் ஆண்டு ஜூலை மாதம் விவசாயம் மற்றும் ஊரக மேம்பாட்டிற்கான தேசிய வங்கியினை (National Bank for Agriculture and Rural Development – NABARD) பாராளுமன்றத்தில் தோற்றுவிக்கப்பட்டது ? 1982**

**51. யார் நபார்டின் தலைவராக இருப்பார் ? ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநர்**

**52. இந்திய தொழில் நிதிக் கழகம எப்பொழுது அமைக்கப்பட்டது ? 1948-ஆம் ஆண்டு ஜூலை 1**

**53. இந்திய தொழில் கடன் மற்றும்முதலீட்டுக் கழகம்(Industrial Credit and Investment Corporation of India (ICICI)) எப்பொழுது அமைக்கப்பட்டது ? 1955-ஆம் ஆண்டு ஜனவரி 5**

**54.இந்திய தொழில் மேம்பாட்டு வங்கி(IDBI) ________ஆம் ஆண்டு வரை இந்திய ரிசர்வ் வங்கியின் முழு துணை அமைப்பாக இருந்தது ? பிப்ரவரி 15, 1976**

**55. இந்திய தொழில் மேம்பாட்டு வங்கி (IDBI) எந்த ஆண்டு முதல் இந்திய அரசிற்கு சொந்தமான தன்னாட்சி பெற்ற ஒரு கழகமாக மாறியது ? பிப்ரவரி 15, 1976**

**56.இந்திய தொழில் மேம்பாட்டு வங்கியின் (IDBI) சிறப்புச் செயல்பாடாக _________ என்ற ஒரு சிறப்புநிதியை உருவாக்கியுள்ளது ? வளர்ச்சி உதவி நிதி (Development Assistant Fund)**

57. ஏற்றுமதி-இறக்குமதி வங்கி (EXIM )எப்போது ஆரம்பிக்கப்பட்டது ? மார்ச் 1982ல்

58. ______ஆம் ஆண்டு இந்திய அரசால் இயற்றப்பட்ட மாநில தொழில் நிதிக் கழக சட்டத்தின்படி பல்வேறு மாநிலங்களில் மாநில தொழில் நிதிக் கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டன ? 1951

59.பண அளிப்பு மற்றும் வ ட் டிவிகி தத்தை மேலாண்மை செய்யும் நோக்கோடு உருவாக்கப்படும் பேரினப் பொருளியல் கொள்கையே _________எனப்படுகின்றது ? பணவியல் கொள்கை

60.பணவியல் கொள்கை யாரால் முன்னெடுத்துச் செல்லப்பட்டது ? 1976-ஆம் ஆண்டு நோபல் பரிசுபெற்ற மில்டன் ஃபிரைட்மேனால்

61."அமெரிக்க ஐக்கிய அரசுகளின் பணவியல் வரலாறு, 1986-1960" (Monetary Historyof the United States, 1867-1960) என்ற நூலின் ஆசிரியர் ? மில்டன் ஃபிரைட்மேன்

62._______என்பது (Expansionary Monetary Policy) மலிவுப் பணக்கொள்கையாகும் (Cheap Money Policy) ? விரிவாக்க பணக்கொள்கை

63.சுருக்கப் பணக்கொள்கை (Contractionary Monetary Policy) ______எனப்படுகிறது ? அருமைப் பணக்கொள்கை (Dear Money Policy)

64."வேலைவாய்ப்பு, வட்டி, மற்றும் பணத்திற்கான பொதுக் கோட்பாடு" (General Theory of Employment, Interest and Money) என்ற நூல் முழுவேலைவாய்ப்பு என்ற பணவியல் கோட்பாட்டின்குறிக்கோளாகும் . இந்த நூலின் ஆசிரியர் ? கீன்ஸ்

65.மின்னணு வங்கியானது ___________என்றும் அழைக்கப்படுகிறது ? நிகழ்நிலை வங்கி முறை (Online Banking) அல்லது இணைய வங்கி முறை (Internet Banking)

66._______என்தன் பொருள் பணப்பரிவர்த்தனைகள் அறிவுறுத்தலின்படி ஒன்றன்பின் ஒன்றாக தீர்க்கப்படுகிறது என்பதாகும் ? மொத்த பணமதிப்பு தீர்வு

67.தானியங்கி பணம் வழங்கும் இயந்திர முன்ற _______ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது ? 1967

68. பணம் வழங்கும் வங்கி (Payment Bank) எப்போது ஆரம்பிக்கப்பட்டது ? ஆகஸ்ட் 2015

69.____________ என்பது வாடிக்கையாளர் தனது வங்கி கணக்கில் இருந்து பணத்தை தானியங்கி இயந்திரம் மூலம் பணம் எடுப்பது பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான கட்டணங்களை வழங்குவது போன்ற பரிவர்த்தனைகளுக்கு பயன்படுத்தப்படும் அட்டை ஆகும் ? பற்று அட்டை

70. கடன் வாங்குபவர் தொடர்ந்து 90 நாட்களில் வட்டியையோ அல்லது கடன் தொகையின் பகுதியையோ செலுத்தாமல் இருந்தால் அதை ____ என்கிறோம் ? செயல்படாத சொத்து

71.2018-19 ஆம் ஆண்டுகளில் _______ கோடி தொகை மத்திய அரசு வங்கிகளுக்கு செலுத்தியுள்ளது ? 68,000 கோடி

72.அதிக நீர்மைத் தன்மையை கொண்டதும் குறுகியகாலத்தில் முதிர்ச்சியுறுவதுமான நிதிக் கருவிகளை கையாளும் சந்தையே __________ எனப்படுகிறது ? பணச் சந்தை

73.நீண்டகால நிதிக் கருவிகளை வாணிபம் செய்யும் சந்தை ________ எனப்படுகிறது ? மூலதனச் சந்தை

74.________ என்பது அரசின் சட்டபூர்வ பணத்தொகுப்பிலிருந்து குறிப்பிட்ட அலகிலான பணத்தின் மதிப்பை செல்லாது என அறிவிக்கும் செயலாகும் ? பணமதிப்பு நீக்கம்

75.இந்தியாவில் ___________இந்திய பிரதமர் நரேந்திர மோடி 500 மற்றும் 1000 மதிப்பிலான காகிதப்பணம் மதிப்பு நீக்கப்படது ? 2016-ஆம் ஆண்டு நவம்பர் 8-ஆம் நாள்

KRISHOBA ACADEMY

# KRISHOBA ACADEMY

## அத்தியாயம் 8 பன்னாட்டு பொருளாதார அமைப்புகள்

**SCHEDULE-9-MINI TEST (12TH–ECONOMICS-LES-8)**

**1. உலக வங்கி மற்றும் பன்னாட்டு பண நிதியம் ஆகிய இரண்டையும் தோற்றுவிக்க காரணமாக இருந்தவர்கள் ? ஜான் மேனார்ட் கீன்ஸ் மற்றும் ஹேரி டெக்ஸ்டர் வொயிட்**

**2. பன்னாட்டு பண நிதியத்தின் தலைமையிடம் மற்றும் துவங்கப்பட்ட ஆண்டு ? வாஷிங்டன், 1945**

**3. உலக வங்கியின் தலைமை இடம் மற்றும் துவங்கப்பட்ட ஆண்டு ? வாஷிங்டன் மற்றும் 1945**

**4. உலக வர்த்தக அமைப்பின் தலைமை இடம் மற்றும் துவங்கப்பட்ட ஆண்டு ? ஜெனிவா , 1995**

**5. பன்னாட்டு பண நிதியம் மற்றும் உலக வங்கி ஆகியவற்றில் 189 உறுப்பு நாடாக அமைந்த நாடு ? நவ்ரு குடியரசு**

**6. நிதியம் ஒரு பன்னாட்டு மத்திய வங்கி போல் உள்ளது என்ற கருத்தை கூறியவர் ? ஹையின்**

**7. ஐ.எம். எப்-ன் கட்டளை பணம் என அழைக்கப்படுவது ? எஸ் டி ஆர் (SDR)**

**8.SDR எப்பொழுது உருவாக்கப்பட்டது ? 1969**

**9. எந்த ஆண்டு நடைபெற்ற எந்த மாநாட்டுத் தீர்மானத்தின் படி உலக வங்கி 1945 இல் தொடங்கப்பட்டது ? 1944, பிரிட்டன் வூட்ஸ் தீர்மானம்**

10. இந்தியா உலக வங்கியின் அதிகாரப்பூர்வ பெயரான _____ என்ற பெயரை வரைவு குழுவுக்கு முதலில் பரிந்துரைத்தது ? IBRD (International Bank for Reconstruction and Development)

11. மறு கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான பன்னாட்டு வங்கி தொடங்கப்பட்ட ஆண்டு (IBRD) - 1945 ( பின்னர் இது உலக வங்கி என அழைக்கப்பட்டது)

12. பன்னாட்டு மேம்பாட்டு அமைப்பு (IDA)உருவாக்கப்பட்ட ஆண்டு ? 1960

13. பன்னாட்டு நிதி கழகம்(IFC) உருவாக்கப்பட்ட ஆண்டு ? 1956

14. பன்முக முதலீட்டு ஒப்புறுதி முகமை(IMGA) தொடங்கப்பட்ட ஆண்டு ? 1958

15. முதலீட்டு தகராறுகள் தீர்விற்கான பன்னாட்டு மையம்(ICSID) உருவாக்கப்பட்ட ஆண்டு ? 1966

16. உலக வர்த்தக மையம் ( World Trade Center) தொடங்கப்பட்ட ஆண்டு ? 1973 Apr-4

17. உலக வர்த்தக மையத்தின் தலைமை இடம் ? நியூயார்க் (அமெரிக்கா)

18. உலக வர்த்தக மையத்தின் விமானத் தாக்குதல் நடைபெற்ற ஆண்டு ? 2011-செப்டம்பர்-11

19.________ ஆம் ஆண்டு உலக வர்த்தக அமைப்பு ஏற்படுத்திய வணிகம் தொடர்பான அறிவுசார் சொத்துரிமை ஒப்பந்தம் பன்னாட்டு அறிவுசார் சொத்துரிமை(TRIPS) சட்டத்திலும் கொள்கை முடிவு எடுப்பதிலும் மாற்றங்களை ஏற்படுத்தியது ? 1995

20. உலக வர்த்தக அமைப்பின் வணிக அமைச்சர்களின் மாநாடு 2020 இல் நடைபெற்ற நாடு ? கசகிஸ்தான்

21. முதன்முதலில் உலக வர்த்தக அமைப்பின் வணிக அமைச்சர்களின் மாநாடு நடைபெற்ற ஆண்டு மற்றும் இடம் ? சிங்கப்பூர்,1996

23. சார்க் அமைப்பின் தலைமையகம் மற்றும் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு ? காத்மண்டு 1985

**24. பிரிக்ஸ் கூட்டமைப்பின் தலைமையகம் மற்றும் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு ? ஷாங்காய், 2001**

**25. தென்கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்பின் (ASEAN) தலைமையகம் மற்றும் உருவாக்கப்பட்ட ஆண்டு ? ஜகார்த்தா, 1967**

**26. சார்க் அமைப்பில் உள்ள நாடுகள் ? இந்தியா,பூட்டான், பாகிஸ்தான், நேபாளம், வங்காளதேசம், மாலத்தீவுகள், இலங்கை, ஆப்கானிஸ்தான்**

**27. தென்கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்பில் உள்ள நாடுகள் ? புருனை, கம்போடியா, இந்தோனேசியா, லாவோஸ்,மலேசியா, மியான்மர்,பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர்,தாய்லாந்து, வியட்நாம்**

**28. பிரிக்ஸ் அமைப்பில் உள்ள நாடுகள் ? பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆப்பிரிக்கா.**

**29. பிரிக்ஸ் நாடுகள் உலக மொத்த தேசிய உற்பத்தியில் எத்தனை சதவிகிதம் பெற்றுள்ளன ? 21%**

**30. உலக மக்கள் தொகையில் எத்தனை சதவிகிதம் இருப்பிடமாகக் கொண்டுள்ளது ? 43%**

---

<u>நிதிப் பொருளியல்</u>

**REFER 12 TH STD NEW ECONOMICS BOOK – 2019**

1. **நிதிப் பொருளியல் என்பது புதிய பதம் (பொது நிதி என்பது பழைய பதம்)**
2. **அரசுக் கருவூலத்தின் நிதிச் செயல்பாடுகள் பற்றி விவாதிப்பது – நிதிப் பொருளியல்**
3. **பிசிகல் என்ற கிரேக்க வார்த்தை – கூடை என்று பொருள் படும் (பொதுவான பை)**
4. **பொது நிதி – அரசின் நிதி சார்ந்தவை**
5. **பொது நிதி பற்றி இலக்கணங்கள் – டால்டன் மற்றும் ஆடம் ஸ்மித்**

"பொதுநிதி என்னும் பாடம் அரசியலுக்கும் பொருளியலுக்கும் இடையே எல்லைக்கோடாக திகழ்கிறது. இது பொது அதிகார அமைப்பின் வரவு செலவுகளைப் பற்றியும், அது ஒன்றோடொன்று சரிசெய்து கொள்வதைப் பற்றியும் கருத்தில் கொள்கிறது".

"அரசின் வருவாய் மற்றும் செலவுகளின் இயல்பையும். கொள்கைகளையும் ஆராய்வதே பொது நிதியியல் ஆகும்".

–ஆடம் ஸ்மித்

6. **பொது நிதியின் பாடப்பொருள் / எல்லை**




7. பொது வருவாய் – வரி மற்றும் வரியில்லா வருமானங்கள்
8. பொதுச் செலவு – அரசின் செலவு
9. பொதுக்கடன் – உள்நாடு மற்றும் வெளிநாட்டில் இருந்து பெறக்கூடிய கடன்
10. நிதி நிர்வாகம் – அரசின் வரவு செலவு திட்டம் ( 1 ஆண்டிற்கான திட்டம்)
11. நிதிக்கொள்கை – வரிகள், மானியங்கள், பொதுக்கடன், பொதுச்செலவு
12. தனியார் நிதி – தனிநபர் அல்லது தனியார் நிறுவனங்கள் வருவாய், செலவு, கடன் மற்றும் அதன் நிதி நிர்வாகம்
13. தற்கால அரசின் பணிகள்



14. பொதுச்செலவு – பொருள்

> மக்களின் சமூகத் தேவையை நிறைவேற்றுவதற்காக மத்திய, மாநில மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மேற்காள்ளும் செலவினமே பொதுச் செலவாகும்.

15. பொதுச்செலவின் வகைப்பாடு – நன்மை அடிப்படையிலான பாகுபாடு, பணி அடிப்படையிலான வகைப்பாடு
16. பணி அடிப்படையிலான வகைப்பாடு – ஆடம் ஸ்மித் – பாதுகாத்தல் பணிகள், வணிக பணிகள், வளர்ச்சி பணிகள்
17. பொதுச் செலவு அதிகரிக்க காரணங்கள் – மக்கள் தொகை வளர்ச்சி, பாதுகாப்புச் செலவு, அரசு மானியங்கள், கடன் சேவைகள், வளர்ச்சித் திட்டங்கள், நகரமயமாதல், தொழில் மயமாக்கல், மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கான மானியங்கள் அதிகரிப்பு
18. பொது வருவாய் - பொருள்

> பொது வருவாய் அல்லது பொது வருமானம் என்பது அனைத்து மூலங்களின் வழியாக அரசு பெறும் வருமானத்தைக் குறிக்கும்.

19. பொது வருவாயின் வகைப்பாடு




20. வரி – என்பதன் பொருள்

வரி என்பது குடிமக்கள் எவ்வித பிரதிபலனும் எதிர்பாராமல் அரசுக்கு கட்டாயமாக செலுத்தக்கூடியதாகும். இது

21. வரியின் இலக்கணங்கள்

"வரி என்பது பொது அதிகார அமைப்பினால் விதிக்கப்பட்டதை செலுத்த வேண்டிய ஒரு கட்டாய பங்களிப்பாகும். செலுத்தப்பட்ட தொகைக்கு சமமான பலனை எதிர்பாரமல் செலுத்த வேண்டியதாகும். இது தண்டத்தொகை அல்லது சட்டபூர்வமான குற்றத்திற்காக விதிக்கப்படுவதல்ல"

– டால்டன்.

"ஒரு நபர் அல்லது ஒரு நிறுவனம் அரசிடமிருந்து
எந்தவொரு நன்மையும் எதிர்பாராமல் அரசுக்கு கட்டாயம் செலுத்தக்கூடியதாகும்"

– அனடோல் முராட்

22. வரி வருவாய் மூலங்கள் – சில – வருமான வரி, நிறுவன வரி, விற்பனை வரி, கூடுதல் கட்டணம், செஸ் (வரிக்கு வரி)

23. வரிசாரா வருவாய் ஆதாரங்கள்

கட்டணம் – பாஸ்போர்ட், ஓட்டுனர் உரிமம் பெற

தண்டத்தொகை – சாலைவிதி மீறல்

பொதுத்துறை நிறுவனங்களின் வருவாய்

மேம்பாட்டிற்கான சிறப்பு தீர்வைகள் – ஒரு பகுதியில்

அன்பளிப்புகள், மான்யம், உதவிகள் – மாநில மற்றும் வெளிநாட்டு உதவி

மரண தீர்வை – வாரிசு இல்லை, உயில் இல்லை

24. வரி விரிப்பு விதிகள்

1. சிக்கன விதி
2. சமத்துவ விதி
3. வசதி விதி
4. உறுதி விதி
5. திறன் மற்றும் நெகிழ்வு விதி

25. ஆடம் ஸ்மித் கருத்துப்படி நான்கு புனித விதிகள்

செலுத்தும் திறன் பற்றிய விதி

நிச்சயத்தன்மை விதி

வசதி விதி

சிக்கன விதி

26. நேர்முக வரி – வருமான வரி (வரியின் சுமையை பிறருக்கு மாற்ற இயலாது)

27. மறைமுக வரி – GST – கடைக்காரர் வரி செலுத்தி பொருளை வாங்குவார், பொருளை வாங்குபவர் மீது வரிப்பளு

28. மறைமுக வரி – சில வகைகள் – உற்பத்தி வரி, விற்பனை வரி, சுங்கத்தீர்வை, கேளிக்கை வரி, சேவை வரி

29. மறைமுக வரி vs நேர்முக வரி

| ஒப்பீட்டிற்கான அடிப்படை | நேர்முகவரி | மறைமுக வரி |
|---|---|---|
| பொருள் | நேர்முக வரி என்பது ஒரு நபரின் வருமானம் மற்றும் செல்வத்தின் மீது விதிக்கப்பட்டு நேரடியாக அரசுக்கு செலுத்துவதாகும். | மறைமுக வரி என்பது ஒருவர் நுகரும் பண்டங்கள் மற்றும் பணிகள் மீது விதிக்கப்பட்டு மறைமுகமாக அரசுக்கு செலுத்துவதாகும் |
| இயல்பு | வளர்வீதம் | தேய்வீதம் |
| சுமை மற்றும் தாக்கம் | ஒரே நபர் மீது விழுகிறது | பல்வேறு நபர்கள் மீது விழுகிறது. |

| | | |
|---|---|---|
| வரி அடிப்படை | வரி செலுத்துபவரின் வருமானம் மற்றும் செல்வம் | பண்டங்கள் மற்றும் பணிகள் வாங்கும்போது / விற்கும்போது / உற்பத்தியின்போது |
| வரி ஏய்ப்பு | வரி ஏய்த்தலுக்கு வாய்ப்பு உள்ளது | பொருளின் விலையிலேயே வரி சேர்ந்திருப்பதால் வரி ஏய்ப்பு கடினமாகும். |
| பணவீக்கம் | நேர்முக வரி பணவீக்கத்தை குறைப்பதற்கு உதவுகிறது | மறைமுக வரி விலை உந்து பணவீக்கத்தை ஏற்படுத்துகிறது. |
| விதிக்கப்படுதல் மற்றும் வசூலித்தல் | தனிநபர் மற்றும் இந்து கூட்டு குடும்பம், நிறுமம் ஆகியோரிடமிருந்து வசூலிக்கப்படுகிறது | பண்டங்கள் மற்றும் பணிகளை நுகரும் நுகர்கோர் மீது விதிக்கப்பட்டு, மதிப்பீட்டாளரால் செலுத்தப்படுகிறது. |
| சுமை | மற்றவர் மீது மாற்றமுடியாதது | மற்றவர் மீது மாற்றிவிடக் கூடியது. |

**30. எந்த வகையான வரிக்கு மாற்றாக GST கொண்டுவரப்பட்டது?**

**மறைமுகவரி**

**31. GST பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஆண்டு? மார்ச் 29, 2017**

**32. GST நடைமுறைக்கு வந்த ஆண்டு என்ன? ஜூலை 1, 2017**

**33. GST – சரக்கு மற்றும் சேவை வரி – மறைமுக வரி**

**34. GST**



**35. இறுதி விற்பனையில் விதிக்கப்படுகிற வரி எது? GST**

**36. GST யின் வகைகள்**

CGST: மாநிலத்திற்குள்ளே நடைபெறுகிற விற்பனையில் மத்திய அரசால் வசூலிக்கப்படுவதாகும். (உ.ம். மாநிலத்திற்குள்/யூனியன் பிரதேசம்)

SGST: மாநிலத்திற்குள் நடைபெறும் விற்பனையில் மாநில அரசால் வசூலிக்கப்படுவதாகும். (உ.ம். மாநிலத்திற்குள்/யூனியன் பிரதேசம்)

IGST: மாநில அரசுகளுக்கிடையேயான விற்பனையில் மத்திய அரசால் வசூலிக்கப்படுவதாகும். (உ.ம். மகாராஷ்டிரா மாநிலத்திலிருந்து தமிழ்நாட்டுக்கு பொருள் விற்பனை).

**37. GST பெரும்பாலான நேரங்களில்**

| பேர நடவடிக்கை | புதிய ஆளுகை | பழைய ஆளுகை | |
|---|---|---|---|
| மாநிலத்திற்குள்ளேயான விற்பனை | CGST + SGST | VAT + மத்திய ஆயத்தீர்வை/ சேவை வரி | வருவாயை மத்திய மற்றும் மாநில அரசுகள் சமமாக பகிர்ந்து கொள்ளும். |
| மற்ற மாநிலத்தில் விற்பனையின் போது | IGST | மத்திய விற்பனை வரி + ஆயத்தீர்வை / சேவை வரி | மாநிலங்களுக்கிடையேயான விற்பனையில் ஒரே ஒரு வரி மட்டும் விதிக்கப்பட்டு, மத்திய அரசு அந்த வருவாயை இட அடிப்படையில் பகிர்ந்து கொள்ளும். |

**38. VAT என்பது பல்முனை வரி, GST ஒரு முனை வரி**

**39. பொதுக்கடன் இலக்கணம்**

"கடன் என்பது அரசு கருவூலத்தால் கடன் வழங்கியவர்களுக்கு வட்டியும், அசலும் கொடுக்கப்பதற்கான உத்தரவாதம் ஆகும். நடப்பு நிதி பற்றாக்குறையைச் சரிசெய்வதற்காக திரட்டப்படும் நிதி ஆகும்"

– பிலிப் E. டெய்லர்

40. பொதுக்கடனின் வகைகள் – உள்நாட்டு பொதுக்கடன், வெளிநாட்டு பொதுக்கடன்
41. பொதுக்கடன் அதிகரிக்க காரணங்கள் – போர் மற்றும் போர்கால ஆயத்தம், சமுதாயத் தேவைகள், பொருளாதார மற்றும் நிதிப்பற்றாக்குறை, வேலைவாய்ப்பு, பணவீக்கத்தை கட்டுப்படுத்துதல், மந்தத்தை தடுத்தல்
42. கடனுக்கென அரசு தனியொரு நிதி – மூழ்கும் நிதி
43. மூழ்கும் நிதி யாரால் அறிமுகப்படுத்தப்பட்டது? இங்கிலாந்தைச் சேர்ந்த வால்போல்
44. பட்ஜெட் என்ற பதம் எந்த வார்த்தையில் இருந்து பெறப்பட்டது? பொளஜெட் என்ற பிரெஞ்சு வார்த்தை (சிறிய தோல் பை என்று பொருள்)
45. மத்திய வரவு செலவு திட்டம் – சரத்து 112
46. மாநில அரசு செலவுத் திட்டம் – சரத்து 202
47. வரவு செலவு திட்டத்தின் வகைகள் – வருவாய் வரவு செலவுத் திட்டம், மூலதன பட்ஜெட்
48. பட்ஜெட் வரவுகள் – வருவாய் வரவுகள், மூலதன வரவுகள்
49. பட்ஜெட் செலவுகள் – வருவாய் செலவுகள், மூலதன செலவுகள்
50. வருவாய் வரவுகள் – வரி வரவுகள், வரிசாரா வரவுகள்
51. மூலதன வரவுகள் – கடன்களை வசூலித்தல், கடன்கள் மற்றும் பிற பொறுப்புகள், முதலீட்டை விலக்குதல்
52. மூலதன செலவு – திட்டம் சார்ந்த செலவுகள், திட்டம் சாரா செலவுகள்
53. பட்ஜெட் உள்ளடக்கங்கள்




54. நிதிக்கு வாக்கெடுப்பு வரவு செலவுத் திட்டம் – சரத்து 116

55. நொண்டி வாத்து வரவு செலவுத் திட்டம் – அரசு தொடர்ந்து அல்லது தொடராமல் இருக்கலாம் (தேர்தல் காரணமாக)

56. பூஜ்ய வரவு செலவு திட்டம் - 1987-88 ல் இந்திய அரசு அறிமுகம்

57. செயல் திறன் வரவு செலவுத் திட்டம் எந்த நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது? அமெரிக்காவில் (சர் உப்பர் தலைமை, 1949)

58. இந்தியாவில் செயல் திறன் வரவு செலவு திட்டத்தை – சாதனைத் திட்டம் என அழைக்கப்படுகிறது

59. சமநிலை வரவு செலவுத் திட்டம்

அரசின் திட்டமிட்ட வருவாய்

=

அரசின் எதிர்நோக்கும் செலவுகள்

60. சமனற்ற வரவு செலவுத் திட்டம்

அரசு எதிப்பார்க்கிற வருவாயும் திட்டமிடப்பட்டுள்ள செலவும் சமமாக இல்லாது இருந்தால் அது சமநிலையில்லா வரவு செலவுத் திட்டமாகும்.

**61. சமனற்ற வரவு செலவுத் திட்டம் வகைகள்**

1.உபரி வரவு செலவுத் திட்டம்.

2.பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம்.

**62. உபரி வரவு செலவுத் திட்டம்**

உபரி வரவு செலவுத் திட்டம்

=

அரசு எதிர்பார்க்கிற வருவாய்>

திட்டமிடப்பட்டுள்ள செலவு

**63. பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம்**

பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம்

=

அரசு எதிர்பார்க்கிற வருவாய்<

திட்டமிடப்பட்டுள்ள செலவு

**64. வரவு செலவு திட்டத்தின் வகைகள்**




**65. வரவு செலவு திட்டம் தயாரிக்கும் வழிமுறைகள்**




**66. இந்தியாவில் அரசுக் கணக்குகள் 3 முறையில் பராமரிப்பு**

(i) தொகுப்பு நிதி

(ii) அவசர நிதி

(iii) பொதுக் கணக்கு

**67. வரவு செலவுதிட்டத்தை கட்டுப்படுத்தும் குழுக்கள்**

(i) பொதுக் கணக்கு குழு

(ii) மதிப்பீட்டுக் குழு

**68. வரவு செலவு திட்டத்தில் உள்ள பற்றாக்குறைகள்**

(அ) வருவாய் பற்றாக்குறை

(ஆ) வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை

(இ) நிதிப் பற்றாக்குறை

(ஈ) முதன்மைப் பற்றாக்குறை

**69. வருவாய் பற்றாக்குறை**

வருவாய் பற்றாக்குறை (RD) = மொத்த வருவாய் செலவினம் (RE) – மொத்த வருவாய் வரவுகள் (RR)

RE – RR > 0 ஆக இருக்கும்.

**70. வரவுசெலவுத் திட்ட பற்றாக்குறை**

வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை = மொத்தச் செலவு – மொத்த வரவு

**71. நிதிப்பற்றாக்குறை**

நிதிப்பற்றாக்குறை = வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை – அரசின் அங்காடிக் கடன்களும் ஏனைய பொறுப்புக்களும்

**72. முதன்மை பற்றாக்குறை**

முதன்மைப் பற்றாக்குறை (PD) = நிதிப்பற்றாக்குறை (FD) – வட்டி செலுத்துதல் (IP)

73. **கூட்டமைப்பு நிதி – மத்திய மற்றும் மாநில அரசு இடையே வருவாய் வள ஒத்துக்கீடு**
74. **மத்தியப் பட்டியல் - 100 இனங்கள், மாநிலப்பட்டியல் – 61, இணைப்பு பட்டியல் – 52**
75. **மத்திய அரசால் விதிக்கப்பட்டு மாநிலங்களுக்கு ஒதுக்கக்கூடிய வளங்கள் – சரத்து 269**
76. **மத்திய அரசால் விதிக்கப்பட்டு ஆனால் மாநில அரசு வசூலிப்பது மட்டும் பயன்படுத்துவது – சரத்து 268**
77. **மத்திய அரசால் விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு மாநில அரசு மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு பகிரக்கூடிய வரிகள் – சரத்து 270 மற்றும் 272**
78. **கூட்டரசு நிதியின் கொள்கைகள்**

1. சுதந்திரம்
2. சமத்துவம்
3. ஒரே மாதிரியான தன்மை
4. போதுமான வளங்களைப் பெற்றிருத்தல்
5. நிதி வசதி
6. ஒருங்கிணைத்தல் மற்றும் ஒன்றுபடுதல்
7. செயல்திறன்
8. நிர்வாகச் சிக்கனம்
9. பொறுப்பேற்பு

79. நிதிக்குழு வரலாறு

| நிதிக்குழு | ஏற்படுத்தப்பட்ட ஆண்டு | தலைவர் | செயல்படும் காலம் |
|---|---|---|---|
| முதலாவது | 1951 | K. C. நியோகி | 1952–57 |
| இரண்டாவது | 1956 | K. சந்தானம் | 1957–62 |
| மூன்றாவது | 1960 | A. K. சந்தா | 1962–66 |
| நான்காவது | 1964 | P. V. ராஜ்மன்னார் | 1966–69 |
| ஐந்தாவது | 1968 | மகாவீர் தியாகி | 1969–74 |
| ஆறாவது | 1972 | K. பிரமானந்த ரெட்டி | 1974–79 |
| ஏழாவது | 1977 | J. M. சாலட் | 1979–84 |
| எட்டாவது | 1983 | Y. B. சவான் | 1984–89 |
| ஒன்பதாவது | 1987 | N. K. P. சால்வே | 1989–95 |
| பத்தாவது | 1992 | K. C. பந்த் | 1995–2000 |
| பதினொன்று | 1998 | A. M. குஸ்ரோ | 2000–05 |
| பன்னிரெண்டு | 2002 | C. ரங்கராஜன் | 2005–10 |
| பதிமூன்று | 2007 | Dr.வஜய் L. கேல்கார் | 2010–15 |
| பதிநான்கு | 2013 | Dr. Y. V ரெட்டி | 2015–20 |
| பதினைந்து | 2017 | N. K. சிங் | 2020–25 |

80. இந்திய அரசியலமைப்பு சரத்து 280 - நிதிக்குழு – 1951

81. 14 வது நிதிக்குழு – 2013 ல் அமைக்கப்பட்டது (இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே)

82. 14 வது நிதிக்குழு காலம் – ஏப்ரல் 1 2015 முதல் மார்ச் 2020

83. 15 வது நிதிக்குழு நவம்பர் 2017 ல் அமைக்கப்பட்டது (நடைமுறைக்கு வருவது ஏப்ரல் 1 2020)

84. நிதிக்குழுவின் பணிகள் – 280 (3)

85. மத்திய அரசு மாநிலங்களுக்கு வழங்கும் மானிய அளவு – சரத்து 275(1)

86. மத்திய மற்றும் மாநில அரசின் நிதிப்பகிர்வை செய்யும் அமைப்பு எது? நிதிக்குழு

87. வரிப்பகிர்வு – 42% மாநிலங்களுக்கு, 52% மத்திய அரசு (GST ன் படி மாநில அரசு 50%)

88. உள்ளாட்சி அமைப்புகள் (4)

1. கிராம ஊராட்சி
2. மாவட்ட வாரியங்கள் அல்லது ஜில்லா அமைப்பு
3. நகராட்சி
4. மாநகராட்சி

**89. பெரும்பாலான ஊராட்சிகளில் ___ நிறுவப்பட்டுள்ளன (பஞ்சாயத்துராஜ்)**

**90. கிராம ஊராட்சியின் வருவாய் ஆதாரங்கள்**

i) பொது சொத்து வரி
ii) நிலம் மீதான வரி
iii) தொழில் வரி
iv) விலங்குகள் மற்றும் வாகனங்கள் மீதான வரி

பிற வரிகளாக சேவை வரி, நுழைவு வரி, திரையரங்கு வரி, புனிதஸ்தலங்கள் வரி, திருமணம் மீதான வரி, பிறப்பு மற்றும் இறப்பு மீதான வரி மற்றும் உழைப்பாளர் மீதான வரி போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது.

**91. மாவட்ட வாரியத்தின் பணி – கிராம ஊராட்சிகளுக்கு உதவி செய்வது மற்றும் வளர்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது**

**92. மாவட்ட வாரியங்கள் வருவாய் ஆதாரங்கள்**

i) மாநில அரசிடமிருந்து பெறும் மானிய உதவி

ii) நில தீர்வைகள்

iii) சுங்க கட்டணம்

iv) சொத்திலிருந்து பெறுகிற வருமானம் மற்றும் மாநில அரசுகளிடமிருந்து பெறக்கூடிய கடன்கள்

v) வளரச்சிப் பணிகளுக்காக மத்திய அரசு மேற்கொள்ளும் திட்டங்களுக்கான மானியங்கள்

vi) பொருட்காட்சிகள் மற்றும் கண்காட்சிகளிலிருந்து பெறப்படுகிற வருமானம்

vii) மாநில அரசு ஏற்றுக்கொள்கிற சொத்துவரி மற்றும் பிற வரிகள்

**93. நகராட்சி அமைப்புகளின் வருவாய் ஆதாரங்கள்**

ii) பொருட்கள் மீதான வரிகள், குறிப்பாக நுழைவு வரி.

iii) தனிப்பட்ட வரிகள், தொழில்வரி, வியாபாரம், வேலைவாய்ப்பு போன்றவற்றின் மீதான வரிகள்

iv) வாகனங்கள் மற்றும் விலங்குகள் மீதான வரிகள்

v) திரையரங்கு வரி

vi) மாநில அரசிடமிருந்து பெறுகிற மானிய உதவி

**94. மாநகராட்சியின் வருவாய் ஆதாரங்கள்**

1. சொத்து மீதான வரி

2. வாகனங்கள் மற்றும் விலங்குகள் மீதான வரி

3. வாணிபம் மற்றும் வேலைவாய்ப்பு மீதான வரி

4. திரையரங்கு வரி மற்றும் காட்சி வரி

5. நகரத்திற்குள் கொண்டு வரும் பொருட்கள் மீதான வரிகள்

6. விளம்பரங்கள் மீதான வரிகள்

7. நுழைவு வரி மற்றும் முனைம வரி

**95. புதிய பொருளாதாரம் – கீன்ஸ்**

**96. நிதிக்கொள்கை இலக்கணம்**

> " நிதிக் கொள்கை என்பது நாட்டின் பொருளாதார நோக்கங்களை அடைவதற்கு பயன்படுத்தப்படும் பொது நிதி அல்லது செலவு, வரி, பெறுதல்கள் மற்றும் நிதி நிர்வாகம் சார்ந்த கொள்கையாகும்". – பியுளெர்

**97. நிதிக்கொள்கையின் நிதிக்கருவிகள் – வரிவிதித்தல், பொதுச்செலவு, பொதுக்கடன்,**

**98. நிதிக்கொள்கையின் வகைகள் – விரிவாக்க நிதிக்கொள்கை (அரசு செலவு அதிகரித்து வரி குறைவு), சுருக்கப்பட்ட நிதிக்கொள்கை (அரசு செலவு குறைவு, வரி அதிகம்)**

**99. நிதிக்கொள்கையின் நோக்கங்கள்**




**100.அறிந்து கொள்வோம்**

வரி : அரசுக்கு மக்கள் எந்த வித பிரதிபலன் எதிர்பார்ப்பும் இன்றி செலுத்த வேண்டியது

பிரதிபலன் : வரி செலுத்தியமைக்காக எதிர்பார்க்கும் நன்மை

விகிதாச்சார வரி : வரியின் அடிப்படையைக் கருத்தில் கொள்ளாது அனைவருக்கும் ஒரே வரி வீதம்

வளர்வீத வரி : வருமானம் உயர உயர வரி வீதம் உயர்தல்

தேய்வீத வரி : வருமானம் உயர உயர வரி வீதம் குறைதல்

உள்நாட்டு பொதுக்கடன் : உள்நாட்டு மக்கள் மற்றும் நிறுவனங்களிடம் இருந்து அரசு கடன் பெறுதல்

**வெளிநாட்டு பொதுக்கடன்** : வெளிநாடு மற்றும் பன்னாட்டு அமைப்புகளில் கடன் பெறுதல்

**பொதுநிதிக் கொள்கை** : அரசின் வரவு செலவு ஆகியவை சார்ந்த கொள்கை

**வரவு செலவு பற்றாக்குறை** : அரசின் எதிர்ப்பார்க்கப்பட்ட வருவாய்க்கும் திட்டமிடப்பட்ட செலவுக்கும் உள்ள வித்தியாசம்

**வரவு செலவு திட்டம்** : அரசின் ஓர் ஆண்டிற்கான வருவாய் மற்றும் செலவு சார்ந்த நிதிநிலை அறிக்கை

**கூட்டமைப்பு நிதி** : மத்திய மற்றும் மாநில அரசுகளிடையே உள்ள நிதி ஒதுக்கீடு பற்றியது

**உள்ளாட்சி நிதி** : இந்தியாவில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளின் நிதி சார்ந்தது

4. ஆடம் ஸ்மித்தால் கூறப்படாத புனித வரிவிதிப்பு விதி எது?

அ) சமத்துவம் விதி

ஆ) நிச்சயத்தன்மை விதி

இ) வசதி விதி

ஈ) எளிமை விதி

5. கீழே உள்ள வாக்கியங்களைக் கருத்தில் கொண்டு, சரியான ஒன்றை அடையாளம் காண்க.

i. மாநில பட்டியலிலோ, இணைப்பு பட்டியலிலோ குறிப்பிடப்படாத வரியை விதிப்பதற்கு மைய அரசுக்கு தனி உரிமையில்லை

ii. அரசியலமைப்பு சில வரிகளை மைய அரசு பட்டியலில் இருந்து மாநில அரசு பட்டியலுக்கு மாற்ற வசதி செய்கிறது

அ) i மட்டும்

ஆ) i i மட்டும்

இ) இரண்டும்

ஈ) ஏதுமில்லை

6. GST இதற்கு சமம்?

அ) விற்பனை வரி

ஆ) தொழிற்குழும வரி

இ)வருமான வரி

ஈ) உள்ளாட்சி வரி

7. இந்த நன்மையை நேர்முக வரி கொண்டிருக்கவில்லை

அ) சமத்துவம்

ஆ) வசதி

இ) நிச்சயத்தன்மை

ஈ) நாட்டுப் பற்று

8. கீழ்வருவனற்றுள் எது நேர்முக வரி?

அ) கலால் வரி

ஆ) வருமான வரி

இ) சுங்க வரி

ஈ) சேவை வரி

9. கீழே உள்ளவற்றில் எந்த வரி மைய அரசின் பட்டியலில் இல்லை?

அ) தனிநபர் வருமான வரி

ஆ) நிறுவன வரி

இ) விவசாய வருமான வரி

ஈ) கலால் வரி

10. அரசின் வருவாய் வரவு ( Revenue Receipts) கணக்கில் சேராதது

அ) வட்டி

ஆ) இலாபம் மற்றும் இலாப ஈவு

இ) கடன்களைத் திரும்பப் பெறுதல்

ஈ) சொத்திலிருந்து கிடைக்கிற வாரம்

11. வருவாய் செலவு (Revenue Expenditure) வருவாய் வருவாயைவிட (Revenue receipts) அதிகமாக இருந்தால், அது

அ) வருவாய் பற்றாக்குறை
ஆ) நிதிப்பற்றாக்குறை
இ) வரவு செலவு பற்றாக்குறை
ஈ) அடிப்படைப் பற்றாக்குறை (Primary deficit)

12. மொத்தச் செலவு, கடன் அல்லாத மொத்த வருவாயை விட அதிகமாக இருந்தால், அது

அ) நிதிப்பற்றாக்குறை
ஆ) வரவு செலவு திட்ட பற்றாக்குறை
இ) முதன்மை பற்றாக்குறை
ஈ) வருவாய் பற்றாக்குறை

13. பற்றாக்குறை நிதியாக்கத்தின் அடிப்படை நோக்கமாவது

அ) பொருளாதார முன்னேற்றம்
ஆ) பொருளாதார நிலைத்தன்மை
இ) பொருளாதார சமத்துவம்
ஈ) வேலைவாய்ப்பு உருவாக்குதல்

14. பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம் என்பன் பொருளாவது

அ) அரசின் செலவை விட அரசின் வருவாய் அதிகம்
ஆ) அரசின் நடப்புக்கணக்குச் செலவு நடப்புக்கணக்கு வருவாயை விட அதிகம்
இ) அரசின் மொத்தச் செலவு மொத்த வருவாயைவிட அதிகம்
ஈ) மேலே கூறியவற்றில் எதுவும் இல்லை

15. பொதுக்கடனைத் திரும்பிச் செலுத்தும் முறை

அ) கடனை மாற்றுதல்
ஆ) மூழ்கும் நிதி
இ) பகுதியாகச் செலுத்துதல்
ஈ) இவை அனைத்தும்

16. பொதுக்கடனை மாற்றுதல் என்பது

அ) பழைய கடன் பத்திரங்களுக்குப் பதிலாக புதிய கடன் பத்திரங்களை மாற்றுதல்

ஆ) அதிக வட்டி வீதம் கொண்ட கடன் பத்திரங்களுக்குப் பதிலாக குறைவான வட்டி வீதம் கொண்ட கடன் பத்திரங்களைக் கொடுத்தல்

இ) குறுகியகால பத்திரங்களுக்குப் பதிலாக நீண்ட கால பத்திரங்களைத் தருதல்

ஈ) மேற்கூறிய அனைத்தும்

17. பட்ஜெட் என்ற பதம் ஃப்ரென்ஞ்ச் வார்த்தையாகிய (Bougette) விலிருந்து பெறப்பட்டது. அதன் பொருள்

அ) சிறிய பை

ஆ) பெரிய பெட்டி

இ) காகிதங்கள் அடங்கிய பை

ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

18. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றில் எது இந்தியாவில் பெரிய பற்றாக்குறையாக இருக்கும்?

அ) வருவாய் பற்றாக்குறை
ஆ) வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை
இ) நிதிப் பற்றாக்குறை
ஈ) முதன்மைப் பற்றாக்குறை

19. நிதிக்குழு நிர்ணயம் செய்வது எது?

அ) இந்திய அரசின் நிதியினை
ஆ) நிதி வளங்களை மாநில அரசுக்கு மாற்றுதல்
இ) பல்வேறு துறைகளுக்கு நிதியை மாற்றுதல்
ஈ) மேற்கூறப்பட்ட எதுவுமில்லை

20. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் எது சரியான சொற்றொடர் எனக் கண்டுபிடி

(i) ஜனாதிபதியால் நிதிக்குழு பணியமர்த்தப்படுகிறது
(ii) ஒரு நிதிக்குழுவின் காலம் 5 ஆண்டுகள்

அ) I மட்டும்
ஆ) ii மட்டும்
இ) இரண்டும்
ஈ) இரண்டும் இல்லை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| இ | ஈ | ஈ | ஈ | ஆ | அ | ஆ | ஆ | இ |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| அ | அ | அ | இ | ஈ | ஆ | அ | இ | ஆ |